# தொண்டன்



கிறீத்தவ இலக்கியத் திங்களேடு.

1986 வைகாசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

1986 - வைகாசி

மலர் 18 – இதழ் 4

❋

ஆசிரியர் :

சி. பி. இராஜேந்திரம்

இணை ஆசிரியர் :

மலர்வேந்தன்

ஆசிரியர் குழு :

P. ஜோசப்

A. G. இராஜேந்திரம்

வெளியீடு :

சமூகத்தொடர்புகள் நிலையம்,

திரி / மட். மறைமாவட்டம்.

தொடர்பு :

சமூகத் தொடர்புகள் நிலையம்,

ஆயரகம்,

மட்டக்களப்பு.

**Social Communications Centre.**

**Bishop's House,**

**Batticaloa.**

விலை :

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ரூபா | 3-25 |
| அரையாண்டு சந்தா | ,, | 18-00 |
| ஓராண்டு | | 35-00 |


## உள்ளே . . . .



| | | |
|---|---|---|
| 1) | இதயத்திலிருந்து | 1 |
| 2) | கவி அரங்கு | 2 |
| 3) | மரியாள் . . . கன்னித்தாய் | 3 |
| 4) | நெருப்பிடை நீந்தும் . . . | 5 |
| 5) | திருமறையை . . . | 9 |
| 6) | சொந்தம் எப்போதும் | 11 |
| 7) | அன்னை அகாத்தா | 14 |
| 8) | அன்பை வளர்க்கும் . . . | 15 |
| 9) | உலகமும் திருச்சபையும் | 17 |
| 10) | மனிதப் போலிகள் | 19 |
| 11) | இளைஞர் அரங்கம் | 21 |
| 12) | இயேசு புராணம் | 24 |
| 13 | குறுக்கெழுத்துப் போட்டி | 27 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே-ஆர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளே! மண்ணுலகப் பெண்களுக்குள்
நம் ஆண்டவரால் ஆசிபெற்றவள் நீயே!

-யூதித் 13/23




# இதயத்திலிருந்து . . .

'மே' மாதம் மாதாவின் வணக்கமாதம். அவள் இரக்கத்தில் நம் நம்பிக்கையைத் தட்டி எழுப்பவேண்டிய மாதம்.

இன்னல்களுக்கும் – இடர்களுக்கும் மத்தியிலும் எம்மை – எம்நாட்டைக் காப்பவள் அவளே என்ற நம்பிக்கை யுடன் எமது செபங்களை அவளை நோக்கித் திருப்பவேண்டிய காலமிது.

அவள் நாசரேத்தூர் யேசுவின் தாய் மட்டுமல்ல, இந்நானிலத்து மக்கள் அனைவரது தாயுமாகும். பெறற் கரிய பெரும்பேறான இவ்வுறவை மறுத்து, பெருமைக்குரிய தாய்மையை பழிப்பாருண்டு. யேசுவை மீட்பரென்றும், இறைமகன் என்றும் ஏத்துவோர் அவரது அன்னையை ஏற் காதது மட்டுமல்ல இழித்தும் பேசுவது வியப்புக்குரியதும் நகைப்புக்குரியதுமாகும்.

இந்நிலையில் அவளைப்பற்றி அதிகமாக அறியவும், அவள்பால் பக்தியைத் தூண்டவும் ஆய்வு வழிநின்று சில புதிய கருத்துக்களை இவ்விதழ் முன்வைக்கின்றது.

'தொண்டன்' கிறீத்தவ – இலக்கியத்திங்களேடு. கிறீஸ்தவ வாழ்க்கையை – கிறீத்தவ கொள்கைகளைப் பற் றிய காலத்துக்கேற்ற சிந்தனைகளை, புதிய கருத்துக்களை வாசகர் முன் வைப்பது எமது கடன். அதுவே எமது விருப்புமாகும். எமது எழுத்தாளர்களும், வாசக அன்பர்க ளும் தம் சிந்தனைகளை தொடர்ந்து பரிமாறுவார்கள் என்ற நம்பிக்கையுடன் இவ்விதழை முன் வைக்கின்றோம்.

-சி. பி. இராஜேந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆதியாகமம்
## மீண்டும்
## அரங்கேறுகிறது.

அன்று
பீரங்கி முழங்கவில்லை
பீதியோடும் வாழ்ந்ததில்லை-
ஆனாலும்
ஆபேல் கொலையானான்-
ஆண்டவர் கேட்டார் காயீனை-
'உன் சகோதரன் ரத்தம்
பூமியிலிருந்து என்னை அழைக்கிறது
என்ன செய்தாய் அவனை?' என்று
இன்று-
பீரங்கி முழக்கம்
சீறிடும் குண்டுகள்
அப்பாவி ஆபேல்கள்
அநியாயமாக
அழிக்கப்படுகிறார்கள்
அவர்கள் ரத்தம்
ஆண்டவன் சந்நதிக்கு
நீதி கேட்டு அழைக்கவில்லையா?
அழைத்திருந்தால் . . .
அநீதி ஏன் தொடர்கின்றது?
ஓ. . .
அன்று
காயீனை ஆண்டவன் அழிக்கவில்லை-
அதனால்
பெருகிய அவன் சந்ததியால்
ஆதியாகமம்
மீண்டும்
அரங்கேற்றம் ஆகின்றதோ? !

**- ரஞ்சனி ஜோசப் -**

## பள்ளி

பள்ளிகளில் மாணவர்
பள்ளி கொள்கின்றனர்
கோல உடைகளுக்கும்
வேட்டுக்களுக்கும்
பயந்து, கொட்டக்கொட்ட
விழித்து
இராமுழுவதும் பற்றைகளில்
பதுங்கி
பகலில் பள்ளிசென்று
பள்ளி கொள்கின்றனர்
இவர்களுக்கு பள்ளி எழுச்சி
இனி எப்போ . . . . ?

**- ஆழியோன் -**

## கிறிஸ்துவும் இளைஞனும்


நற்போதகரே என்றழைத்தான்
நலம் பெற விழைந்த தோர் இளைஞன்
சொற் கூறென்றான் இவ் வுலகில்
சோர் விலா நெடுவாழ் வடைவதற்கே
சற் றுமே நோக்கினார் இறையேசு
சாந்தமாய் பதிலை பகர்ந் திட்டார்
அற் பமாம் செயல்கள் தமைவிலக்கும்
ஐயிர் கட்டளை செப்பி நின்றார்.

அடியேன் அவற்றைச் செய்கின்றேன்
அந்நாள் முதலாய்க் கொண்டென்றான்
கடிதில் அவனை உணர்ந்துகொண்டே
கனிவாய் பதிலை தொடர்கின்றார்
''மிடியோர்க் களிப்பாய் உள்ளவற்றை
மீதமாய் என்னையே பின்தொடர்வாய்''
வடிவாய் அனைத்தும் கேட்ட அவன்
வாடிய முகமாய் அகன்றிட்டான்.

குறையைப் போக்க மனமின்றி
குதூகலத்தில் மிகை நாடி
நறைசேர் இனிய வாழ்வதிலே
நயம் பெற விளைவதே இப்பருவம்
கறைகளைப் போக்குவ திளம் பருவம்
களைகளைக் களைந்திட வேண்டாமா?
இறையுடன் இணைவீர் இளைஞர்களே
இகமும் பரமும் உமக்காமே.

**செல்வி நா. விமலாம்பிகை**
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரியாள்
## உண்மையான
# கன்னித்தாய்

மரியாள் 'இறைவனின் தாய்' என நற்செய்தி நூல்களில் நேரிடையான குறிப்பேதும் இல்லை. அவள் யேசுவின் தாயென அழைக்கப்பட்டாள். (அரு 2.12:19:25,1:4) இயேசு உண்மையான இறைவன் (அரு 1. 14) எனவே மரியாள் கடவுளின் தாயென அழைக்கப்படுவது சரியாகும். கலா 4:5 இவ்வுண்மையை உணர்த்தும். மரியாளை கிறீஸ்துவின் தாய் என்றே அழைக்கலாம் என நெஸ்தோரியஸ் என்பவர் போதிக்கவே அவரை எதிர்த்து அலெக்சாந்திரியா சிரில், மரியாள் உண்மையில் 'இறைவனின் தாய்' என்று போதித்தார். இறுதியில் எபேசு பொதுச்சங்கம் (431) மரியாளைக் 'கடவுளின் தாய்' (THEOTOKOS) என உலகுக்கு உணர்த்தியது.

மரியாள் இயேசுவை ஈன்றெடுத்தாள். ஆனால்' மரியாள் இயேசுவைப் பெற்றெடுத்ததால் மட்டுமே அவள் இறைவனின் தாயாக மாறவில்லை. மாறாக இந்த உறவு உருவாக ஈன்றெடுத்தல் ஒரு இன்றியமையாத நிபந்தனையாகும். தாய்மை என்பது ஒரு பெண்ணுக்கும், அவள் ஈன்றெடுக்கும் பிள்ளைக்கும் உள்ள உறவு. தன்னையே தன் பிள்ளைக்குக் கொடுத்து வருவதால் பிள்ளையின் நலனில் அக்கறை கொள்வதால், அவனது வளர்ச்சியில் ஈடுபடுவதால், தன்னையே முழுமையாக அர்ப்பணிப்பதால் ஒரு தாய் தனது தாய்மையை அடைகிறாள். எனவே குழந்தையை பெற்றெடுக்கும் செயல் இந்த உறவு உருவாக அடிப்படை நிபந்தனை, அடையாளமாகும்.

''கன்னிமைக்கு எப்பழுதுமின்றி மரியாள் இயேசுவைப் பெற்றெடுத்தாள்'' என்று இலாத்தரன் பொதுச்சங்கம் வரையறுத்தது. ஆனால் கன்னிமை என்றால் என்னவென்று அச்சங்கம் விளக்கவில்லை. குழந்தையைப் பெற்றெடுத்த ஒரு பெண் தாயாகிய பின் அவள் உடலுறுப்பைச் சார்ந்த அளவில் கன்னியாக இருக்கமுடியாது. இதிலிருந்து உடலுருக்குலையாதிருப்பது கன்னிமை என்று அர்த்தம் கொடுக்கப்பட்டது. ஆனால், இதை வேறுவிதமாக நோக்க வேண்டும். தாய்மையை உடல் சார்பாக விளக்காது, அதை உறவென விளக்கினோம். எனவே கன்னிமையையும் உடல் சார்பாக விளக்கக் கூடாது மாறாக அதை ஓர் உறவாகக் கொள்ளல் வேண்டும்.

மரியாள் கன்னிமை இழக்கவில்லை' என்று இலாத்தரன் கூறும்போது இயேசு மரியாளின் உடலுரு குலையாமல் புதுமையாகப் பிறந்தார் என்று சொல்வதாக அர்த்தமாகாது. ஏனெனில் அது உண்மையானால் இயேசுவை உண்மையான மனிதனென்றும், மரியாளை உண்மையானதாயென்றும் கூறமுடியாது எனவே இயேசு இயற்கையின் நியதிக்கு மாறாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையான வழியில் பிறக்கவில்லை. மற்ற மனிதப் பிறப்பு போன்றே மரியாளும் உடலுருக்குலைந்திருக்க வேண்டும்.

மரியாள் குழந்தையைப் பெற்றெடுத்துத் தாயான போதும் கன்னிமை கழியவில்லையெனில் மரியாளின் தாய்மைக்கும், கன்னிமைக்கும் நெருங்கிய தொடர்பிருக்க வேண்டும். மரியாள் தன் மகன் யேசுவிடம் தன்னையே கையளித்து தாய்மையை மிளிரச் செய்தாளென்றால், அச்செயலின் மூலமே தனது கன்னிமையைக் காத்திருக்க வேண்டும். அதாவது கன்னிமை என்பது இயேசுவுக்கு, கடவுளுக்குத் தன்னையே அர்ப்பணிப்பதாகும்.

மற்றப் பெண்கள் குழந்தை பெற்றால் தாயாக மாறுவர். உடல் சார்ந்த கன்னிமையைக் காக்க முடியாது. இது உடலுருகுலைவதால் அல்ல. கடவுளோடு நேரிடை தொடர்பு கொள்ளமுடியாதலால். ஏனெனில் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் வெறும் மனிதக் குழந்தைகளே!

இந்த விளக்கத்தின் மூலம் கன்னிமை உடல் சார்பற்ற ஒன்றல்ல, அது உறவு சார்புடையது என்று தெரிகிறது. எனவே மரியாள் கடவுளின் தாயாக இருப்பதால் தான் அவள் கன்னியாகவுமிருக்கிறாள்.

அருள்திரு ம. ஜெரோம் சந்தணசாமி,
''மறை அருவி.''

# ஒரு வேத வாக்கு நிறைவேறுகிறது.

அன்று
இனிதுமைக் கல்வாரிக்கு
அநேகம் பேர்
வடக்குக் கிழக்கிலிருந்து
யாத்திரை போனார்கள்
இன்றும்
கல்லடி, பூசா, கல்வாரிகளுக்கு
அதைவிட அநேகம்பேர்
பாதயாத்திரை
போகிறார்கள்
அது யாரோ ஒரு மகனின்
பாடுகளை நினைவுகூர
இது தமது மக்களின்
பாடுகளை நிறுத்திவைக்க
எத்தனையோ ஆண்டுகளின்
பின்னர்
ஒரு வேதவாக்கு நிறைவேறுகிறது!
''எனக்காக அழவேண்டாம்
உங்களுக்காகவும்
உங்கள் பிள்ளைகளுக்காகவும்
அழுங்கள்.''

கவியிளவல் இ. மரியநேசம்

# புதிய குருக்கள்

எமது மறைமாவட்டத்தில், இம்மாத நடுப்பகுதியில் மூன்று அருட் சகோதரர்கள் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.

சகோ. சவரிமுத்து செல்வராஜ் 12-05-86 மட்/ புளியந்தீவு புனித மரியாள் இணைப் பேராலயத்திலும், சகோ. கிளமென்ற் அன்னதாஸ் 14-05-86 மட்/தாண்டவன்வெளி புனித காணிக்கைமாதா ஆலயத்திலும், சகோ. நோயல் இம்மானுவல் 21-05 86 திருகோணமலை புனித மரியாள் பேராலயத்திலும் குருக்களாக திருநிலைப்படுத்தப்படுவர்.

திரு/ மட். மறை மாவட்ட ஆயர் பேரருள் திரு கிங்ஸ்லி சுவாம் பிள்ளை அவர்கள் திருச்சடங்குகளை நிறைவேற்றி வைப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்பில் நீந்தும் நிலாக்கள்



## நிலா தமிழின் தாசன்

### அங்கம் பன்னிரண்டு (12)

157 தந்தியினைப் படித்தவுடன் வேந்தன் சற்றுத்
தடுமாறித் தான் போனான்: மனது நொந்து;
வந்துள்ள பிரச்சினையில்: காதல் மேலா?
வருங்கால விடுதலையின் கடமை மேலா?
இந்நிலையிற் குழம்பியதன் இதயத் திற்கோர்
இறுக்கத்தை ஏற்படுத்தித் தெளிவு கொண்டு
பந்தங்கள் பாசங்கள் யாவும் பின்னே!
பற்றெல்லாம் கடமையில்தான் என நிமிர்ந்தான்.

158 நேர் நின்று வாழ்த்து தனைக் கூறுதற்கும்!
நேரிழையின் மனநிலையை அறிவதற்கும்
பேர் கொண்ட கடமையினால்! வாய்ப்பு இல்லை
பிரியமுடன் அவளுக்கோர் அஞ்சல் தீட்டி
ஆர்மூலம் கொடுப்பதென எண்ணி ஈற்றில்
அடுத்துள்ள அவள் தோழி ''குமுதா'' தன்னைத்
தேர்ந் தெடுத்து தன் வாழ்த்தைக் கூறு என்றே!
தேன் பாலாய் வாழட்டும்! என்று சொன்னான்.

159 அஞ்சலினைப் பெற்றிட்ட ''குமுதா'' தானும்
ஐயையோ! இதுவென்ன கொடுமை என்றே:
நெஞ்சத்தில் துயரோடு சொன்னாள்: அண்ணா!
நிலைமையிது வேறெவர்க்கும் வரவே கூடா:
வஞ்சகரின் பணவெறிக்கும் பதவிப் பேய்க்கும்
வையத்தில் புனிதரெலாம் பலியாய்ப் போகும்
நஞ்சு நிலை இனி மேலும் நிலையா வண்ணம்
நல்லபணி நாம் செய்யத் துணிவோ மென்றாள்.

160 ''குமுதா''வின் வார்த்தையினைக் கேட்டு வேந்தன்
குமுறு மனத் துள்ளேயோர் குளிர்ச்சி கண்டான்
அமுதான அவளுணர்ச்சி தன்னை வாழ்த்தி
அன்போடு விடையீந்து அனுப்பி வைத்தான்
''நமது குறி'' பலிக்கையிலே! யாவும் மாறி
நல்ல புது மணமொன்றே எங்கும் வீசும்
தமிழன்னை குறள் மணியாய்ச் சிரித்தே யிந்தத்
தரணியிலே! தலைநிமிர்ந்து தழைத்து நிற்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

161 கடமை யினைக் கண்ணென்று கொண்டவேந்தன்
கண்கலங்க விடைபெற்றுச் சகலருக்கும்
திடமுடனே யிருங்கள் நான் திரும்பி யுங்கள்
திரு முகத்தைக் காண்பதற்கு வருவே னென்றான்
''படலை வரை'' வழியனுப்ப வந்தோர், கண்கள்-
படுமூற்றாய் நீர் சொரிய விடை கொடுத்தார்
நடமாடும் பிணங்களென தந்தை தாயார்
நல்ல உடன் பிறந்தோரும் தவித்து நின்றார்.

162 எரிமலையின் உச்சியிலே! ஏற்றி யென்னை
எனது மொழி இனந்தன்னை மறுத்துச் சின்ன
வரியொன்று கூறென்று வருத்தி னாலும்
வளையாது ''தமிழ் வாழ்க'' என்றே சொல்வேன்:
உரிமையினை மீட்பதற்கு உறுதி கொண்டு
உழைப்பதற்குச் சென்றிட்ட வேந்தன் நெஞ்சில்
விரிந்துயர்ந்து கிடந்திட்ட உணர்ச்சி யின்று
வேங்கையவன் மனநிலை நம்மவர்க்கும் வேண்டும்.

163 சோகத்தின் முழுவடிவாய்ச் சோதி யென்னும்
சுகந்த மலர் சுருண்டபடி கிடந்தா ளங்கே!
சாகத்தான் அவள் நினைத்தாள்: சாவாலொன்றும்
சாதிக்க முடியாது என்றும் கண்டாள்
வேகத்துடன் பொழுது மறைந்து போச்சு:
விவாகத்திற் கான ''சுப நேரம்'' ஆச்சு
ஆகட்டும் என்றிட்டார் முத்தையாவும்
அமர்க் களமாய் அங்கெல்லாம் நடக்கலாச்சு.

164 மாண்டபிணம் தனைப் புதைக்கு முன்னர் நல்ல
மணம் வீசும் மலர், சாந்து மற்றுமுள்ள
பூண் வகைகள் புத்தாடை கட்டுமாப்போல் -
பூவையவள் ஜோதியையும் சோடித்தார்கள்
நீண்டமனத் துள் நிறுத்தி வளர்த்த காதல்
நெருப்பாக அவளுள்ளே எரிவதைத் தான்
காண்பதற்கு மறுத்திந்தக் கொடியோர் செய்யும்
காட்சியினை வேறென்ன வாறு சொல்வம்?

165 நாதஸ்வரம் மேளங்கள் முழங்கக் கூட்டாய்
நடைபயின்று மாப்பிள்ளை வந்து சேர்ந்தார்
வேதங்கள் ஓதுகின்ற குருக்கள் வேத-
விதிப்படியே! மணவறைக்குள் அமரச்செய்தார்
ஓதுபவர் ஹோமங்கள் வளர்த்துத் தாலி
ஓதிய பின் மாப்பிள்ளை கையில் ஈந்தார்
வேதனையின் விளிம்பினிலே! நின்றஜோதி
விறுக் கென்று தானெழுந்து பேசலுற்றாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

166 கேளுங்கள் சபையோரே! நிகழுமிந்தக்
கேவலத்தைத் திருமணமென் றுரைப்பலாமோ?
வாழ்வுக்கு ஏற்றதுணையான ஆணை
வாஞ்சையுடன் காதலித்தேன் ஆனாலிந்த
கீழ்மதியர் தூய மனத் துறவைக் கண்டும்
கிஞ்சிற்றும் மதியாது துணிந்தேயிந்தப்
பாழ் பட்ட முடிவுக்கு என்னைத் தள்ளிப்
பலியாக்க நினைக்கின்றார் பணியலாமோ?

167 என் நிலையை மாப்பிள்ளை தனக்கு யானும்
ஏற்கனவே! மனந்திறந்து இயம்பி விட்டேன்
பின்னுமிவர் சீதனத்திற் காசை கொண்டு
பேசாது வந்துள்ளார் தாலி கட்ட
அன்பிற்காய் வாழாது பணத்திற் கொண்ட
ஆசைக்காய் வாழுமிவர் ஆணோ! வாழ்வில்
இன்பத்தை இவரோடு எங்கு காண்பேன்
இருமனங்கள் இணையாமற் திருமணமோ?

168 கேள்விகளைக் கணையாகத் தொடுத்தாள் ஜோதி
கேட்டபடி சபையோர்கள் திகைத்து நின்றார்
வாழ்வினிலே! இது கொடுமை என்றார் சில்லோர்!
வஞ்சியின் மேல் தவறில்லை என்றார் சில்லோர்!
தேள் கொட்டத் தான் விழித்த திருடனைப் போல்
''திரு திரு'' வென் றேயிருந்த மாப்பிள்ளையும்
கூழ்முட்டை அடிபட்ட கயவன் போல
குனிந்த தலை நிமிராமல் தானிருந்தார்.

169 இப்படியே இவரிருக்க! ''இனியும் நானோர்
இமைப் பொழுதும் இங்கிருத்தல் பாவமென்றே
அப்பாவே! அம்மாவே! மன்னியுங்கள்
அடியேனை மறந்திடுங்கள்'' என்று கூறி
அப் ''பாவை'' பின்னோக்கிப் பாரா வண்ணம்
அடியெடுத்து வேகமுடன் தான் நடந்தாள்
தப்பாது வேந்த னிலம் தானடைந்தே!
தன் நிலையை அவர்கட்கு விளங்கச் சொன்னாள்

170 மங்கையிவள் நிலை கேட்ட வேந்தன் மாதா!
மகளே! இம் மாதவறைச் செய்யலாமோ?
எங்களது ஏழ்மைக்கும் இமயம் போன்று
இருக்கின்ற உங்களுக்கும் ஒவ்வாதம்மா!
மங்கலமே! காணாது வாழ்வில் நாளும்
மண்புழுவாய் வாழுபவர் நாங்களம்மா!
இங்கிருந்து போயுங்கள் வீடடைந்து
இன்பமுடன் வாழ்மகளே! என்று சொன்னாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

171 மேலுமவள்! தன்மைந்தன் போன பாதை
விளக்கமுடன் தான் சொன்னாள்! ஜோதி கேட்டு
''காலையிலே! அவர் போன பின்னால் தோழி
கடிதத்தைக் காண்பித்தாள்! காலம் செய்யும்
கோலத்தை நானெண்ணி நொந்தேன்! ஆனால்
குறை யொன்றும் நேராது அவரே மீண்டும்
வேலெடுத்து வினையறுத்தோன் துணையினாலே!
வெற்றியுடன் வருவதை நான் காண் -
பேனென்றாள்''

172 ''மாமி'' எந்தன் முடிவினிலே! மாற்ற மில்லை!
வறுமையிலே! வாழ்வதற்கு அஞ்ச வில்லை
சாமி துணையாய வரும் பெருநாள் மட்டும்
தங்களது ஒரு மகளாய் நானிருப்பேன்
பூமியிலே! பணமுடையோர் மேலோ ரில்லை
புனிதமனம் கொண்டோரே மே லோராவர்
சேமிக்கும் பொருளழிந்து போகும் மண்ணில்
செய்கின்ற நல்வினையோ சேரும் விண்ணில்

173 அசையாத உறுதியுடன் ஜோதி சொந்த
அன்பனவன் வரு நாளை! இவர்க ளோடு
இசைவோடு தானிருந்து கஞ்(சி)சோ கூழோ!
இன்பமது எனக் குடித்துக் காத்திருந்தாள்
தசை மீது கொண்டிட்ட காதல் இந்தத்
தரணியிலே! தானழிந்து போகும்! நெஞ்சில்
இத மோடு தானுதித்த காதல் என்றும்
இறவாது சோதியுடன் வாழும் வெல்லும்.

**- நிறைந்தது -**

---

## வாசக நேயர்கட்கு ! வணக்கங்கள் !

காவியம் என்ற வகையில்! ''நெருப்பிடை நீந்தும் நிலாக்கள்'' எனது கன்னி முயற்சியா தும் எனவே இது பற்றிய விமர்சனங்கள் எனக்குத் தேவை. ஏனென்றால்! விமர்சனங்கள் சிருஷ்டி கர்த்தாவை நிச்சயம் நெறிப்படுத்தும். ஆனால், அவை பாராட்டுக்களாய் மட்டும் அமையாது. நக்கீரத் தனமுடன் நவிலப்பட வேண்டும். உங்கள் விமர்சனங்களை தொண்டனுக்கு எழுதுங்கள்- விரும்புவோர் தனிப்பட எனக்கும் வரையுங்கள்.

இந்தக் காவியத்தை நான் மறந்தாலும்! இதை எழுதிய ''நேரங்களை'' என்னால் மறக்க முடியாது வேட்டொலிகளின் மத்தியிலும் பாட்டொலிகளை எழுப்பியிருக்கிறேன், வீட்டை விட்டகன்று காட்டினுள் இருந்த வேளையிலும் இதில் சில பாட்டுக்களுக்கு உருப்போட்டிருக்கிறேன். காவியத்தில் காணப்படும் சில குறை நிறைகட்கு இந்த ''நேரங்கள்'' ஒரு காரணம்.

அதிஷ்டவசமாக நமது ஆயுள் சற்று நீண்டு கொண்டால்! மீண்டும் தொடர்ந்து இந்த நிலாக்களைப் பூரணப்படுத்தி உங்கள் முன் உலவ விடுவேன் பன்னிரண்டு திங்களாக வெளிவந்த எனது கன்னிமுயற்சிக்கு களம் அமைத்துத் தந்த ''தொண்டன்'' நிர்வாகத்தினருக்கும், குறிப்பாக அன்பர் ''மலர்வேந்தன்'' அவர்கட்கும், அவ்வப்போது கடிதங்கள் மூலம் என்னை உற்சாகப்படுத்திய அன்பு வாசக நெஞ்சங்கட்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இவ்வண்ணம், அன்பின்,

**-நிலா தமிழின்தாசன்**

முகவரி: நிலாவெளி-3,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமறையைத் தெரிந்துகொள்வோம்

றெக்ஸ்

❋ கத்தோலிக்கருக்குத் திருமறை பற்றிய அறிவு மிகக் குறைவு என ஏனைய கிறீஸ்தவ சகோதரர்கள் குற்றம் சாட்டுகிறார்களே இது உண்மைதானே? அதற்கு திருச்சபையின் வழி நடத்துவோரரே காரணம். இதுவும் உண்மை தானே?

J அன்றனட் - கல்முனை

❋ ஆம். துரதிஷ்டவசமாக அக் குற்றச்சாட்டு உண்மைதான். திருச்சபையில் வழி நடத்துவோர் இவ்விடயத்தில் மிகுந்த அக்கறை காட்டாதது இதற்கு ஒரு காரணம்தான்.

அதே வேளை இன்னும் ஒன்றையும் கூறியாக வேண்டும் சரி. போதிப்போர்தான் அக்கறை காட்டவில்லை என்றால் விசுவாசிகளுக்கும் மறையறிவு பெற வேண்டும் என்ற ஆசையில்லையா? பத்திரிகைகளையும், நாவல்களையும் தாங்களாக வாசிப்பதைப் போன்றும் திருமறை சம்பந்தமான பத்திரிகைகளையும், நூல்களையும் வாங்கியோ அன்றேல் இரவல் வாங்கியோ படிக்க முடியாதா? மனமுண்டானால் இடமும் உண்டல்லவா?

என்னைப் பொறுத்த மட்டில் கத்தோலிக்கரின் திருமறை அறிவுக் குறைவுக்குக் காரணம் போதிப்போரின் அக்கறையின்மையும் விசுவாசிகளின் அசட்டையுமே என்பேன்.

❋ ஆண்டவரின் தூதர் மரியாளிடமும் சக்கரியாஸ் இடமும் ஒரே மாதிரியான நற்செய்தி சொன்னார்
மரியாள்:- ''இது எங்கனமாகும்? நானோ கணவனை அறியேனே'' என பதிலிறுத்தாள்
சக்கரியாஸ் :- ''இவை யாவும் நிகழும் என எனக்கு எப்படித் தெரியும்? நானோ வயதானவன் என் மனைவியும் வயதுமுதிர்ந்தவள் என்றார் இவ்விரு பதில்களிலும் என்ன வித்தியாசம்? ஏன் ஆண்டவரின் தூதர் மரியாளின் பதிலை ஏற்று சக்கரியாஸின் பதிலை ஏற்கவில்லை?

-E S மலர்
பாலையூற்று

❋ பதில்:- மேலோட்டமாக இவ்விரு நிகழ்ச்சிகளையும் வாசிக்கும் போது இருவருமே அவவிசுவாசத்தோடு சந்தேகப்படுவது போல தோன்றினாலும், இரண்டு வேறுபட்ட கோணங்களிலிருந்து கேட்கப்படுவது நற்செய்தியின் கிரேக்க மூலப்பிரதியை வாசிக்கும் போது புலப்படும்.

சக்கரியாஸ் பின்வருமாறு கேட்கின்றார். ''எந்த அத்தாட்சியைக் கொண்டு நான் இதை நம்புவேன் (அறிவேன்) ஏனெனில் நானோ விருத்தாப்பியன், என் மனைவிக்கும் ஆண்டுகள் கடந்து பேயிற்றே?''
சக்கரியாசின் கேள்வியின் அர்த்தம் பின்வருமாறு
இயற்கையின் விதிகளுக்கமைய இது நடைபெறமுடியாது எனத் தீர்மானித்து விட்டதால் – அதாவது விருத்தாப்பியம் ஏற்பட்டு மாதவிடாயும் அற்றுப்போய் விட்டதனால் – அவர் ஒரு அற்புத அடையாளத்தை அத்தாட்சியாகக் கேட்கின்றார் எனவே தான் அவருக்கு அத்தாட்சி கொடுக்கப்படுகின்றது.

மரியாளின் கேள்வியோ வேறுவிதமானது ''நான் இன்னும் கணவனை அறியாததால் இது எங்ஙனம் ஆகும்?'' மரியாள் தன் நியாயமான, இயற்கையோடிணைந்த சந்தேகத்திற்கு, பிரச்சனைக்கு நடைமுறையான விளக்கம் மட்டும் கேட்கின்றாள் எனவே தேவைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட பூரண விளக்கம் கிடைக்கின்றது பரிசுத்த ஆவி உம்மீது நிழலிடுவார்- - - உமது மகன் இறைவனின் மகன் எனப் படுவார்:

இப்போது உங்களுக்கு இரு கேள்வி களின் வேறுபாடுகள் புரிகின்றதல்லவா மரியாள் சக்கரியாஸ் இருவரின் கேள்வி கள் நியாயமானவை நடைமுறை யானவை. ஆயினும் மரியாளிடம் அவ விசுவாசம் இருக்கவில்லை. எனவே தான் விளக்கம் கொடுக்கப்பட்டதும் அடை யாளங்கள் அத்தாட்சிகளைக் கேட்கா மலே தன்னை முழுமையாக இறைவனு க்கு கையளித்து விடுகிருள்; ''இதோ நான் ஆண்டவரின் அடிமை அவர் சித் தம் என்னில் நிறைவேறட்டும்'' ஆனால் சக்கரியாஸோ தனக்கொரு நிச்ச யமான அத்தாட்சி கிடைத்தாலன்றி தன்னால் இதை நம்ப முடியாது போல் கேட்கின்றார் ஆகவே அத்தாட்சிக்கு அடையாளமும் அவவிசுவாசத்திற்கு தண்டனையும் ஒன்று சேர்ந்தே கிடைக் கின்றது. மரியாளின் விசுவாசம் மிக்க உளப்பாங்கு எலிசபெத்தினூடாக உல குக்கு பிரகடனப்படுத்தப்படுகின்றது. ''ஆண்டவர் சொன்னது நிறைவேறு மென விசுவசித்த நீ பேறு பெற்றவள்''

✱



வாயாடி
வண்டுமணி

இலங்கையில், முன்னைய ஆண்டு களிலும் பார்க்க கடந்த ஆண்டில் தற்கொலை செய்பவர்களின் எண் ணிக்கை மிகவும் குறைந்துள்ளது.

வானொலிச் செய்தி 2-4-86

ஹி . . . ஹி . . . ஹி . . . என்னங்க இப்படி சொல்லிப் புட்டீங்க ! தற்கொலை தானே கொறைஞ்சிருக்கு . . . அநியாயக்கொலையெல்லாம் கூடிக்கிட்டே போவுதே ஓஹோ ! அதுதான் தற்கொலை பண்ணிக்க ஆளுங்க இல்லபோலயிருக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 4

**'பாடையிலே என்னுடலம் போகும் போதும்''**
**பைந்தமிழில் அழுமோசை கேட்க வேண்டும்!**

- இராஜபாரதி -

''மண்ணுக்கு மண்ணாகவும்'
சாம்பலுக்கு சாம்பலாகவும்
புழுதிக்கு புழுதியாகவும்-
ஒப்படைக்கிறேன்!''

உபதேசியார் மண்வெட்டியால் மூன்று முறை செல்லையாவின் சவக்குழியில் மண் போட்டு முடிந்ததும் அங்கே குழுமிநின்ற உற்றுரும் உறவினரும், நண்பர்களும் மூன்று பிடி மண்ணைப் போட்டு அவரவர் கடமைகளை முடித்துக் கொண்டார்கள்.

ஆனந்தன் சோகமே உருவாக கைகளைக்கட்டிக்கொண்டு அப்படியே உசும்பாமல் நின்முன். தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கடன்களை முடித்து விட்டாலும் அவன் மனம் நிம்மதி அடையாமல் உள்ளூர சஞ்சலப் பட்டுக்கொண்டேயிருந்தது.

சுடலை வேலைகளெல்லாம் முடிந்து,சுடலைஞானம் பேசிக்கொண்டு நின்றவர்களெல்லாம் மெல்லமெல்ல நகரத் தொடங்கினர்கள். அதை அவதானித்த வீரகத்தி, அவசர அவசரமாக நடந்து வந்து அசையாமல் நின்ற ஆனந்தனின் கைகளைப் பிடித்து ''தம்பி ஆனந்தன், ஆக்களெல்லாம் போருங்க! நீ ஒருக்காப் போய் எல்லாரையும் வீட்டுக்கு வந்திற்றுப் போகும்படி சொல்லு' என்ருன். ஆனந்தனுக்கு ஒரே அதிர்ச்சியாகப் போய்விட்டது. நேற்றுப் பார்த்த வீரகத்திக்கும் இன்று காணும் வீரகத்திக்கும் எவ்வளவோ வித்தியாசமிருந்தது.

சட்டென எல்லாப் பிரச்சினைகளையும், கோபதாபங்களையும் மறந்து வீரகத்தி இவ்வளவு நெருக்கமாக வந்து தன்னேடு ஆதரவாகப் பேசுவானென்று ஆனந்தன் நினைத்துப்பார்க்கவேயில்லை.

''அப்பாவின் மரணம் கீரியும் பாம்புமாக இருந்த எங்களை ஒற்றுமையாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது'' இப்படி எண்ணிய படியே ஆனந்தன் வீரகத்தி யைப் பார்த்து ''அண்ண!'' என்று விழித்தான். அவனு டைய கண்களிலிருந்து பொல பொலவென்று கண்ணீர் மாலை யாக வடிந்தநிலை,

தந்தையின் பிரிவையெண் ணித்தான் அவன் கலங்குகி றன் என்று தப்பாக புரிந்து கொண்ட வீரகத்தி ''தம்பி ஆனந்தன் அழாத! நடந்தது நடந்துபொயித்து! இனிநடக்க வேண்டியதைப் பற்றி யோசிக் கிறதுதான் புத்தி: செல்லையா அண்ணணப்போல நாமும் ஒரு நாளைக்குச் சாகவேண்டியவர் கள்தான், அதமறந்து போட்டு இனிமேலாவது பொறுப்போடு வாழப்பார். இவ்வளவு கால மும் நீ தான்தோன்றித்தன மாக நடந்ததைப்போல நட வாமல் பொறுப்புணர்ச்சிமிக்க கவனுக வாழவேணும் உனக் குக் கீழ்ப்பட்ட சகோதரங்கள ஒரு வழிப்படுத்தி அவர்கள முன்னுக்குக் கொண்டுவாற பெரிய பொறுப்பு உன் தலை மேல தானுகவே விழுந்து போச்சி! சரிசரி சவத்துக்கு வந் தாக்களெல்லாம் போய்க்கொ ண்டிருக்கிறுங்க ஓடிப்போய் வீட்டுக்கு வந்துபோகச்சொல்!' என்று வீரகத்தி சொல்லிமுடித் ததும் ஆனந்தன் சொன்னுன், ''அண்ண, எனக்காக நீங் களே போய்ச் சொல்லுங்க!'' அந்தளவில் வீரகத்தி மடிப்புக் குலையாத வர்லாமணியை இழு த்துவிட்டுக்கொண்டு வேக மாக நடந்தான்.

சுடலையிலிருந்து குனிந்த தலை நிமிராமல் ஆனந்தன் முன்னுல் வர அவன் பின்னுல் வீரகத்தியும், மற்றவர்களும் அமைதியாக நடந்து செல்லை யாவின் வீட்டை நெருங்கிய தும் பாக்கியம் ஓடிச் சென்று ஆனந்தனைக் கட்டிப்பிடித்துக் கொண்டு ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிட்டாள். அவளை வீரகத்தியின் மனைவியும், இன் னும் சில பெண்களும் இழுத் தெடுத்து அவள் ஒப்பாரிச் சத் தத்தை அடக்கவே அவர்களு க்குப்போதும் போதுமென்றுகி விட்டது.

செல்லையா வத்தை ஓட் டும்போது கடற்கரையில் அள் ளிக் கொட்டிய இரண்டுவத் தைக் குருத்து மணலும் அந்த வீட்டுமுற்றத்தில் நிலாவெளிச் சமாகத் தெரிந்த வளவிற்குள் வந்தவர்களெல்லாம் 'சம்மா லம்' சோலி அமர்ந்துகொண் டார்கள் எல்லோருக்கும் பீடி, சுருட்டு, சிகரட், வெற்றிலைத் தட்டங்கள் பரிமாறப்பட்டன. வீரகத்தி சுடப்போன சின்ன வனும் ஆனந்தனின் நண்பர் களில் சிலரும் சுறுசுறுப்பாக அவைகளைப் பரிமாரிக்கொண் டிருக்க, ''அங்கே வை! இங்கே வை!'' என்று வீரகத்தியே 'ஓடர்' கொடுத்துக்கொண்டிரு ந்தான். அப்போது ஒருபையன் ஓடி வந்து ''உங்கள பாக்கியப் பெரியம்மா வரட்டாம்! என்று சொன்னதும் வீரகத்தி திரும் பிப் பார்த்தான்

சாய்ப்பூட்டின் பக்கம் யன் னலோரமாக பாக்கியமும், ஆனந்தனும் தங்கைகளும் நிற் பது தெரிந்தது. உடனே அவன் அவர்களை நெருங்கினுன்.

## அரசனும் ஆடையும்

பழைய திருவாங்கூர் சீமையை ஆண்ட மன்னர்களில் மார்த்தாண்டவர்மன் ஒரு நாளுக்கு ஓர் ஆடையை உடுத்து வானும். அன்று உடுத்தியதை அன்றே களைந்தெறிவது அவ னது வழக்கம். அதை மறுபடியும் தீண்டுவதில்லை. மன்னன் மேனியைத் தீண்டிய புத்தாடை மற்றவர்களுக்கு ஆடையாகி விடுமாம். இப்படி நம்மால் செய்ய முடியுமா?

ஆனுல், மனிதரில் பலர் இவ்வாறு அடிக்கடி மாற் றும் பண்பு கொண்டவர்கள். ஆடையை அல்ல அன்பையும் நட்பையும் தான். இவர்களுக்கு இன்று ஒரு நண்பன். நாளை மற்றொரு நண்பன். இப்படி எத்தனையோ நண்பர்கள் இவர் களுக்கு நட்பும் நண்பர்களும் கடைவீதி சரக்காகி விட்டனர். இல்லை, கட்டுகின்ற வேட்டியும் சட்டையும் போலாகிவிடுகின்ற னர். நல்லவேளை நண்பர்களைத்தான் மாற்றுகின்றனர். மனைவி மக்களை மாற்றுவதில்லை இவர்கள்.

-சேவியர் ஜோதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தம்பி வண்ணன இன்னும் காணல்லேயே! ரெண்டு மூன்று விசனம் விட்டனுப்பியும் ஆளைக் காணல்ல!'' என்று பாக்கியம் அந்தரப் பட்டுக் கொண்டிருந்தாள்.

''இண்டைக்கு அமிர்தகழி யிலயும் ஒரு சாவீடு! அங்கேயும் இவன்தான் வெளுக்கிறவன் அதாலதான் பிந்துதுபோலகிடக்கு! என்னெண்டாலும் அவன்ட மகனையாவது இஞ்ச அனுப்புயிருக்கலாம் தானே! ம்'...'' என்று வீரகத்தி கையைப் பிசைந்தபடி தெருவறுல் பக்கம் பார்த்தான். அவன் பார்வை தெருவாசல் கேற்றில் பட்டுத் தெறிக்கவும் அங்கே வண்ணன் 'மசக்குச் சிரிப்புச் சிரித்தபடி மார்பைத் தோளில் சுமந்தபடி வரவும் நேரம் சரியாகவேயிருந்தது.

''என்னடப்பா மூத்தான் இவ்வளவு நேரமும் உன்னைக் காத்துக்கொண்டு நிக்கிறம் நீ எங்கபோய்த் துலஞ்சனி!'' என்று வீரகத்தி கேட்டதற்கு மூத்தான் எதுவும் பேசாமல் வாய்க்குள் அடக்கிவைத்திருந்த வெற்றிலைச் சாற்றை 'புளிச்'சென வேலியோரமாகத் துப்பிவிட்டு, அதே நமட்டுச் சிரிப்போடு வேகமாக நடந்து வந்து மண்டபத்தின் ஓரமாக மாராப்பை இறக்கினன்.

''ஊரடங்கவும், ராவைக்குச் சோருக்கிற குடும்பங்களுக்கும் மாத்துக் குடுத்தாப்போதும்!'' என்ருள் பாக்கியம். இதற்கிடையில் வளவிற்குள் சம்மாலம் கோலியிருந்தவர்களெல்லாம் எழும்ப ஆயத்தப் பட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது மூத்தான், ஒரு வேட்டியை மடித்தெடுத்துக் கொண்டுபோய் எல்லோருக்கும் முன்னிலையில் நின்று ''எல்லோருக்கும் பொதுவாக இந்த மாத்தைப் போடுகிறேன்.'' என்று சத்தம் போட்டுச் சொல்லியபடியே அந்தவேட்டி மடிப்பை முற்றத்தில் தொப்பென்று போட்டான்.

மாத்துக்கொடுக்க வழியிருப்பவர்கள் கூட இப்படி ஒரு மாத்தைப்போட்டு விசயத்தை சிக்கனமாக்கிக்கொள்வது இப்போதெல்லாம் ஒரு 'பெஷனு'கவே போய்விட்டது. அகனல் எவரும் அதைப் பெரிது படுத்திப் பேசாமல் மெதுவாக எழுந்து, ஆனந்தனிடமும், பாக்கியத்தினிடமும் ''போய் வருகிறேம்'' என்று சொல்லி தங்கள் தங்கள் முகங்களைத் தெரியப்படுத்திக் கொண்டு வெளியேறி நடந்தார்கள். பொழுது நன்ருக இருட்டிவிட்டது.

வீரகத்தி தனக்கு மாத்து வேட்டி தேவையில்லையென்று சொல்லி விட்டு வீட்டுக்கு நடந்தான்.

பாக்கியமும், வீரகத்தியின் மனைவியும் அவரவர் மாற்றுச் சேலைகளை எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குச் செல்லும் போதே வீட்டுமுற்றத்தில் போடப்பட்டிருந்த பந்தலுக்குள் 'பெற்ரேள் மெக்ஸ்' வெளிச்சம் தூக்கப்பட்டு விட்டது.

ஆனந்தன் நன்ருகத் தோய்ந்தபின் மாற்றுவேட்டியைக் கையில் எடுத்தான். அப்போது தான் அவன் வரும் போது துவாயை எடுத்துவர மறந்தது அவனுக்கு மூளையில் தட்டியது, வீட்டிற்குள்ளும் ஒரே பெண்கள் கூட்டம் சங்கடமானநிலை ''என்னடா செய்யலாம்!'' என்று ஆனந்தன் தடுமாறிய போது 'உஸ்!' என்று நல்ல பாம்பு சீறுவதைப் போல சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான் பெரிய வீட்டு யன்னலின் ஊடாக தங்கவளையல்கள் பளபளக்க ஒரு மெல்லிய வழுவழுப்பான கரம் துவாயொன்றை அவனிடம் நீட்டியது. அந்த அழகான கரத்திற்குரிய முகத்தை நிமிர்ந்து பார்த்தான். அதுவும் அழகாகவே தெரிந்தது. எதுவும் பேசமுடியாமல் வீரகத்தியின் மகள் ஜெயந்தி கொடுத்த அந்தத் துவாயை ஆனந்தன் வாங்கிக் கொண்டான். இதை அங்கே கிணற்றடிக்கு நீராட வந்த பாக்கியம் கண்டாளோ தெரியாது. ஆனல் வீரகத்தியின் மனைவி கனகம் கண்டு விட்டாள்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அர்ப்பணிப்பில் 60 ஆண்டுகளைக் கண்ட அன்னை அகாத்தா

கடந்த ஏப்ரல் திங்கள் 13-ம் நாள் ஏழைகளின் சிறிய சகோதரி அகாத்தாவின் அர்ப்பணிப்பின் 60-ம் ஆண்டு நிறைவு விழா மட்டக்களப்பு புனித சூசையப்பர் வயோதிபர் இல்லத்தில் கொண்டாடப்பட்டது.

ஸ்பானியர் நாட்டைச் சேர்ந்த இவர் 1923-ம் ஆண்டு ஏழைகளின் சிறிய சகோதரிகளின் சபையில் சேர்ந்தார். சந்நியாசப் பயிற்சிக்காக பிரான்சு தேசத்துக்குச் சென்று 1926-ம் ஆண்டு தனது முதல் வாக்குத் தத்தத்துக்குப் பின் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார் ஆங்கிலம் அறவே தெரியாதிருந்தும். அது அவர் தொண்டுக்கு தடையாக இருக்கவில்லை. அங்கு அவர் ஆற்றிய பணி வயோதிபர் அனைவரையும் மிகவும் கவர்ந்தது 1932-ம் ஆண்டில் கடைசி வாக்குத்தத்துக்குப் பின், இவர் சீனாவுக்கும், இந்தியாவுக்கும் பின்னர் இலங்கைக்கும் அனுப்பப்பட்டார்.

1954-ம் ஆண்டு மட்டக்களப்பில் வெட்டுக்காடு என்னும் இடத்தில் இன்னும் மூன்று அருள் சகோதரிகளுடன் தன் பணியைத் தொடங்கிய இவர் காடாகக் கிடந்த இடத்தில் அழகான சூசையப்பர் ஆலயத்தையும், வயோதிபர் இல்லத்தையும் தன் அயராத உழைப்பினால் ஆறு ஆண்டுகளில் கட்டியெழுப்பினார். அன்று இந்நாட்டில் அடியெடுத்துவைத்தவர் இன்றுவரை தன் தாய்நாடு திரும்பவில்லையென்றால் அவர் தன் பணியில் இந்நாட்டுடன் எத்துணை ஒன்றித்து விட்டார் என்பதை நாம் புரிந்துகொள்ளலாம்.

வாழ்க அவர் தொண்டு ! வளர்க இறையரசு !

-செல்வி A. அன்ரலி

## வாழ்த்துப் பாடல்

சோபனங்கள் சொல்லிச் சொல்லி
துதிபாடுவோம் – எங்கள்
அன்னையாம் மதர் அகத்தா
அன்புடன் நீடூழிவாழ . .

ஏழை மக்கள் சேவைக்கெனத்
தேவனை நீ வேண்டிநின்றாய்
தேவசுதன் அருளாலே
சேவை செய்து பாடுபட்டாய்
உடல் பொருள் உயிராசை
அத்தனையும் நீ துறந்தாய்
உற்ற சுற்றம் உறவு எலாம்
முற்றுமே நீ மறந்தாய் — சோப : . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வத்திகான் !

திருச் சபையின் தலை நகராக ரோமா புரி விளங்குகிறது. ரோமாபுரியின் ஒரு பகுதியே வத்திக்கான் 105 ஏக்கர் பரப்பளவில் வத்திக்கான் அமைந்துள்ளது. இது ஓர் நகரம் எனினும் முழுச் சுதந்திரம் கொண்ட மாநில அந்தஸ்து கொண்டது. இதனால் இது ஓர் உரிமையுள்ள தனிநாடு.

வத்திகான் உலகிலேயே மிகச்சிறிய நாடாக கணிக்கப்படுகிறது. இதற்கென்று தனிப்படை, தேசிய கீதம், தேசிய கொடி (வெள்ளை-மஞ்சள்) வானொலி, வானொளி நிலையங்கள், நீதிமன்றங்கள் எல்லாம் இங்கு உண்டு. இங்கு மக்கள் தொகை 1500 ஆகும். சுமார் மூவாயிரம் பேர் இங்கு பணிபுரிகின்றூர்கள். இந்நாட்டின் தலைவராக இருப்பவர் தான் திருத்தந்தை.

வத்திக்கான் வரியற்ற ஒரு நாடு. இங்கு வரும் பக்தர்கள் செலுத்தும் காணிக்கையே திருத் தந்தையின் வருமானமாகும். இங்கு இலத்தீன் மொழியே ஆட்சி மொழியாக உள்ளது.

நாட்டின் நிர்வாகத்தை கவனித்துக் கொள்ள ஓர் அமைச்சரவை உள்ளது. இந்த அமைச்சரவையின் தற்போதைய தலைமை அமைச்சராக கர்தினல் 'கசரோலி' உள்ளார். வத்திகான் இலங்கை உட்பட உலகின் 104 நாடுகளுடன் தூதர் உறவு கொண்டுள்ளது. 1815 இல் தயாரிக்கப்பட்ட உலக உடன்பாட்டின் படி எந்த நிகழ்ச்சியிலும் வத்திக்கான் தூதுவருக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்பதாகும். இங்கு 'வேட்டர் ரோமனு' என்ற நாளிதளும் வெளிவருகிறது.



# அன்பை வளர்க்கும் ஓர் சமாதானப் புரு!

-தொகுப்பு-எஸ். ஜீவநாயகம்-

## புனித பாறையப்பர் தேவாலயம் :

வத்திகானின் மகுடமாக திகழ்வது புனித இராயப்பர் தேவாலயமாகும். "நீ பாறையாய் இருக்கின்றாய் அந்தப் பாறையின் மீது என் திருச்சபையைக் கட்டியெழுப்புவேன்" எனக்கூறிய யேசுக் கிறிஸ்து திருச்சபையை தன்சீடர் சிமியோனிடம் ஒப்படைத்தார். அதனால் புனித இராயப்பரை புனித பாறையப்பர் எனவும் கூறப்படுகிறது.

புனித சிமியோன் இராயப்பரின் கல்லறையின் மீதுதான் புனித இராயப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாலயம் (புனித பாறையப்பர் தேவாலயம்) கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தை 1506 ஆம் ஆண்டு கட்டத் தொடங்கி 120 ஆண்டுகளின் பின் 1626 ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டது. உலகிலே மிகப்பெரிய தேவாலயமாகவும் அதிக கூடிய வருமானம் உள்ளதாகவும் இவ்வாலயம் கணிக்கப்படுகிறது.

ஆலயத்தின் உட்பக்க நீளம் 632 அடியாகவும் உட்பக்க அகலம் 139 அடியாகவும் உள்ளது. இதன் முற்றத்தில் ஒரு இலட்சம் மக்கள் கூடி நிற்க முடியும். இவ்வாலயத்தின் மற்றுமொரு சிறப்பாக ஆலயத்தின் ஒவ்வொரு பகுதியும் கலைநுணுக்க வேலைப்பாடுகள் அமைந்ததாககாணப்படுகிறது. மைக்கல் ஆஞ்சலோவின் புகழ் பெற்ற சிற்பமான மரித்த இயேசுவை மரியாள்மடியில் கிடத்தியிருக்கும் காட்சி இவ்வாலயத்தில் தான் உள்ளது.

இங்கு புனிதர்களுடைய சிலைகள் எல்லாம் வெண்கலத்திலும் பளிங்குக் கல்லிலுமே செய்யப்பட்டுள்ளன. ஆலய பீடத்தை நான்கு வெண்கலத் தூண்கள் தாங்கி நிற்கின்றன. பீடம் அண்ணுந்து பார்க்குமளவிற்கு உயரமானது

ஆலயம் முழுவதும் இயேசுவின் வாழ்க்கை, சரித்திரம் படங்களாகத் தீட்டப்பட்டுள்ளன இவ்வாலயத்திற்கு அடித்தளம் (குகை) ஒன்று காணப்படுகிறது. அங்குதான் திருத்தந்தையர்கள் இறந்தபின் அடக்கம் செய்யப்படுகின்ருர்கள். ஒவ்வொரு திருத்தந்தையினது கல்லறையும் வெவ்வேறு கலை அமைப்பு கொண்டதாக இருக்கும்.

வத்திக்கானில் திருத்தந்தை இருக்கும் போது ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பகல் 11 மணியளவில் புனித இராயப்பர் தேவாலயத்தின் மாடியில் நின்று உலகம் முழுவதிலும் இருந்து தன்னைக்காணவரும் மக்களிற்கு காட்சி அளிப்பதை வழக்கமாக கொண்டுள்ளார். இக்காட்சியை ஒவ்வொரு வாரமும் இலட்சக்கணக்கான மக்கள் கண்டு களிக்கிருர்களாம்.

(தொடரும்)

## அறிவால் நம்பிக்கை

அறியாமை என்பது உனது உலகம். முடியும் வரை உன்னுேடு இருக்கும். ஆகவே, உன்னிடம் அறியாமை இருக்கிறது என்பதையே நினைத்துக்கொண்டிராமல், உன்னிடம் உள்ள அறிவை நினைவில் கொண்டு 'நானும் ஒரு அறிவாளியே என்ற தன்னம்பிக்கையோடு வாழ்!

❋ ❋ ❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமும் திருச்சபையும்

-D. சாமிநாதன்

## (ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்)

துறவிகள் மேலும் மேலும் கிறிஸ்தவ சமுதாயத்திடம் இருந்து தங்களைப் பிரித்தவர்களாய் உலகியல் தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டவர்களாய் துறவற மடங்களுக்குள்ளே தனியொரு மறைந்த வாழ்வு வாழ ஆரம்பித்தனர் துறவிகளின் வாழ்வே ஆவியோடிணைந்த மெய்யான கிறிஸ்தவ வாழ்வென்றும் பொது நிலையினரின் வாழ்வு உடலோடும் உலகோடும் சேர்ந்த வாழ்வென்றும் கணிக்கப்படத் தொடங்கியது ஒருவன் பூரண கிறிஸ்தவனாக வாழ வேண்டுமாயின் துறவிகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் எவ்வளவுக்கு அதிகமாக ஒருவன் துறவிகள் வாழ்வைப் பின்பற்றுகிறானோ அவ்வளவுக்கு அதிகமாக அவன் கிறிஸ்தவனாகிறான் என்றும் கணிக்கப்பட்டது

ஆயினும், இக்கால கட்டத்தில் திருச்சபைக்கு கிறிஸ்தவ உலகின் மீதும் அதன் செயற்பாடுகள் மீதும் அதிக செல்வாக்கும் ஆதிக்கமும் இருந்தே வந்தது கிறிஸ்தவ உலகின் வரலாற்றையே வழி நடத்தும் ஆசானாய்த் திருச்சபை தன்னை எடைபோட்டு செயலாற்றி வந்தது.

ஆனால் மத்திய நூற்றாண்டிலே அரசியலோடிணைந்த செயற்பாடுகள் யாவும் படிப்படியாகத் திருச்சபையின் ஆதிக்கத்தில் இருந்தும் பிடியிலிருந்தும் தங்களை விடுவித்துக் கொள்ள முனைந்தன. புதிதாக உருவாகிய சிறுசிறு ஐரோப்பிய நாடுகள் யாவும் தங்கள் தனித்துவங்களையும், தன்னாட்சி உரிமைகளையும் காட்டத் தொடங்கின. பொருளாதாரம், வியாபாரம் என்பன தனிச் சக்திகளாக மாறின. கல்விக் கூடங்களும், கலாசாலைகளும், ஆய்வு நுண்கலை ஆகியவற்றிலே சுதந்திரமாகச் செயற்படத் தொடங்கின படிப்படியாகச் சமுதாயத்தின் பல்வகை முறைகளும் சுயமாக வளரவும் தன்னாதிக்கம் கொண்டனவாய்த் திகழவும் திருச்சபையின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபடவும் ஆரம்பித்தன. சமுதாயத்தில் எங்கு பார்த்தாலும் திருச்சபை இதுவரை காலமும் கொண்டிருந்த ஆதிக்கமும் அதிகாரமும் தளர்ந்து தகர்த்தெறியப்பட்ட வண்ணமாகவே இருந்தன. சுதந்திர தாகம் வாழ்வின் எல்லாப் பகுதியிலும் பீடு நடை போடலாயிற்று. இதனைத் தடுத்து நிறுத்த அன்று திருச்சபை அதிகாரிகள் பலர் முனைந்தனர், முயற்சியும் எடுத்தனர், ஆயினும் முடியவேயில்லை. பொருளாதாரம் வியாபாரம் என்பன தனித்துவமும் தன்னாதிக்கம் கொண்ட சக்திகளாய் வளர்ச்சி பெறலாயின. சர்வகலாசாலைகளில் புது வகையான ஒரு விழிப்புணர்ச்சி உருவாகத் தொடங்கியது. திருச்சபையின் விசுவாச சத்தியங்களைப் புரிந்து கொள்வதிலும் அவை பற்றிய ஆய்வுகள் நடாத்தவும் சுதந்திரம் வேண்டும் என்ற குரல் கல்விக் கூடங்கள் தோறும் ஒலித்தன. படிப்படியாக மனித சமுதாயமும் கலாச்சாரங்களும் திருச்சபையின் ஆதிக்கத்தில் இருந்து தங்களை விடுவித்து கொண்டனவாய் முன்னேற்றம் காணவும் முழுமையை நோக்கிப் பீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடை போடவும் தொடங்கின.

திருச்சபையின் அதிகாரிகள் மக்கள் மீதும் உலக நிகழ்ச்சிகள் மீதும் இதுவரை காலமும் அதிமிகு அதிகாரமும், ஆதிக்கமும், செல்வாக்கும் கொண்டிருந்தனர். இதனால் திருச்சபை தனக்கே உரித்தான விசுவாசம், நன்நடத்தை ஆகிய முக்கிய விடயங்களில் மட்டுமல்ல இவற்றிற்குப் புறம்பான ஆதிகாரத்தையும் மக்கள் மீதும் மன்னர்கள் மீதும் கொண்டிருந்தது. எந்த விடயத்திலும் தனது முடிவே இறுதித் தீர்ப்பென எண்ணியிருந்தது.

இவ்வாறு பல நூற்றாண்டுகளாகத் திருச்சபை மக்கள் மீதும் சமுதாய அமைப்பு செயல்பாடுகள்மீதும் கொண்டிருந்த பிடிகள் யாவும் தகர்த்தெறியப் பட்டாற் போன்ற ஒரு நிலை உருவாகியது. இக்காலக் கட்டத்தில் வாழ்ந்த திருச்சபைப் பெரியார்களும் அதிகாரிகளும் உலகம் போகும் போக்கைப் பார்த்துப் பெரிதும் கவலைப்பட்டனர். திருச்சபை காட்டும் வழிமுறைகளையும் ஆலோசனைகளையும் தூக்கி வீசிவிட்டு இவ்வுலகம் செயல்படுமேயானால் உலகின் கதி என்னாகிவிடும் என்று பல பெரியார்கள் அங்கலாய்த்தனர்.

(தொடரும்)

---

# பிரசங்கம் திருப்பலியில்

பிரசங்கம் திருப்பலியில்

திருப்பலியில் நற்செய்திவாசகம் முடிந்ததும் குருக்கள் அல்லது தியாக்கோன் போன்றவர்கள் பிரசங்கம் வைக்கிறார்கள் அல்லவா?

இவை உப்புசப்பில்லாத வெறும் பிதற்றல்கள், சமகாலப் பிரச்சனைகளைத் தொடாத, கவர்ச்சியற்ற கூப்பாடுகள் அரைத்த மாவையே மீண்டும் அரைத்து அறுக்கிறார்கள் என்று சிலர் முனகுவதுண்டு.

வேறு சிலர் திருப்பலியில் இதுதான் INTERVAL TIME என்பது போல் 'ஹாயாக' ஓய்வெடுப்பார்கள். அருகிலுள்ள தேநீர்கடைக்குச் சென்று சூடாக ஒரு பிளேன்டி அடித்துவிட்டு வருவாருமுண்டு.

என்ன இருந்தாலும் அழகான ஆழமான பிரசங்கம் வைக்கும் குருக்கள் இல்லை என்று சொல்லிவிடமுடியுமா.

4-ம் நூற்றாண்டுக்கு முன் திருப்பலியில் குருக்கள் பிரசங்கம் வைப்பதில்லையாம். ஆயர்மட்டுமே பிரசங்கம் வைக்கும் உரிமையுடையவராயிருந்தார். நான்காம் நூற்றாண்டுக்குபின்தான் குருக்களும் மற்றவர்களும் பிரசங்கம் வழங்கும் வழக்கம் வந்ததாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# - மனிதப் போலிகள் -

**- மூதூர் N. C. அருள்வரதன் -**

மார்கழி மாதம் முடிந்து மாசியும் பதினைந்தைக் கடந்து விட்டது. இன்னும் மழை விட்டபாடாக இல்லை. கிழமையில் இரண்டு மூன்று தடவையாவது நன்றாக வெழுத்து வாங்கிறது. குளம் குட்டை பள்ளம் படு குழி எல்லாம் நிரம்பி வழியத் தொடங்கியுள்ளன. நுளம்புக் கடிக்கும் வியாதிகளுக்கும் குறைவேயில்லை. விறுந்தையோரமாகச் சரிந்து கிடந்த ஒச்சாய்ப்புக் கொட்டிலுக்குள் கூனிக் குறுகி முனகிக் கொண்டு கிடந்தார் பேதுறுக் கிழவர். இரண்டு நாட்களாகக் கிழவர் எங்குமே போகவில்லை. ''புள்ள தங்கச்சி · · · உன்ர அப்பாக் கிட்டச் சொல்லிக் கொஞ்சம் மருந்து எடுத்துத் தரச் சொல்லு நெஞ்சுக்க பொறுக்கிற மாதிரி இருக்கு வாயெல்லாம் பச்சக் கச்சல்..'' கிழவர் அனுக்கத்தோடு பேத்தியிடம் கூறுகிறார் . . ' அவள் அதை காதில் வாங்கிக் கொள்ளாமல் தன்வேலையாக இருக்கிறாள். ''அடியே தங்கச்சி: போய்ச் சொல்லு புள்ள'' கிழவர் மீண்டும் முனகுகிறார். ''உனக்குக் கண்ட கண்ட இடமெல்லாம் சுத்தித் திரிய ஒரு கோதாரியுமில்ல ஆசுப்பத்திரிக்குப் போறதுக்கு ஒரு ஆள் வேணும் என்ன?. . . அவர் வயலுக்குப் போகப்போகிறார் பின் நேரம் எடுத்து வரச் சொல்லுறன் அதுக்கிடையில உனக்கு ஒண்ணும் நடக்காது சும்மாகிட'' அடுப்படியிலிருந்த கிழவரின் மகள் பொரிந்து தள்ளுகிறாள். கிழவருக்கு இதுவெல்லாம் கேட்டுப் புளித்து விட்ட கதைகள். அவர் முன



கிக் கொண்டே கிடக்கிறார்.

பேதுறுக் கிழவரைப் பொறுத்தவரை இன்று அவர் பூமிக்குப் பாரமான நிலை தனது வாரிசுகளென்று பெருமை பாராட்டிக் கொள்ள மூன்று ஆண் மக்களும் மூன்று பெண் மக்களும் பெற்று அவர்களை நல்ல நல்ல இடங்களில் (வசதியான) கரை சேர்த்து விட்டு நிம்மதியாக இருக்கிறாரா என்றால் அதுதான் இல்லை. ஆறு மக்களின் வீட்டுத் திண்ணையிலே காத்துக் கிடந்து அவர்களின் சுடு சொற்களுக்கு இலக்காகி வெந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார். மக்கள் மருமக்களின் காரசாரமான வார்த்தைகள் சில வேளைகளில் கிழவரைக் கண் கலங்க வைத்து விடும். அதனால் ஏற்பட்ட மனத்தாக்கம் குறிப்பிட்ட வீட்டிற்கு இரண்டொரு நாட்கள் தலை காட்டமாட்டார். ஆனால் அவரது கோபத்தைக் கண்டு எவருமே பெரிதாக எடுப்பதில்லை. அவரது கோபமெல்லாம் இரண்டு நாட்கள் கழிய சரியாகிவிடும். இனி மாமன் மச்சான், அண்ணன், தம்பி இப்படி உறவுகளை வைத்துக் கொண்டு சுருட்டு வெற்றிலைக்கு வேண்டிய காசுக்காக சில வீடுகளில் போய் வருவதும் கிழவருக்கு வழக்கம். அவரது உறவுகளில் அவரைக் கண்டதும் உபசரித்து ஆதரவு காட்டுவதற்கு யாருமே இல்லா விட்டாலும் கிழவரை அந்த இடத்தை விட்டு விரைவாகத் துரத்துதற்கென்றாலும் சிலர் சில சில்லறைகளைக் கொடுத்து (கடுப்போடு) அனுப்புவார்கள். கிழவர் எப்போதும் சிரித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தோடேயே வாங்குவார்.

பேதுறுக் கிழவரின் இந்தப் போக்கு பெற்ற பிள்ளைகளுக்கு கௌரவம் குறைவாம் ''நீ இப்பிடி ஊர்வெளிய திரிஞ்சு பிச்சைக் காசி வாங்கித் திரியிற தெண்டால் இங்காலப் பக்கம் வரவேணும்' காசு தாரவங்கட வீட்டிலேயே கெடந்து தொல. உன்னால ஊருக்குள்ள தலகாட்டேலாத வெக்கமாயிருக்கு'' கிழவரின் மக்களின் ஒரே வகையான திட்டுக்கள் பாவம் பேதுறுக் கிழவர். அவரால் என்ன தான் செய்ய முடியும். தள்ளாத வயது இந்த நேரத்திலே அவரை அன்பாகப் பார்த்துப் பராமரிக்க யாருமே இல்லை.

''தங்கச்சி தேத்தண்ணி வச்சித்தாம்மா. வயித்தப்பெரட்டிற மாதிரி இருக்கு'' கிழவரின் தீனக் குரல் மீண்டும் கேட்கிறது. ''இந்தாடி தங்கச்சி இதக் கொண்டு போய் அந்தக் கிழடுக்கிட்ட குடு, இல்லாட்டி அதுக்கு இப்ப சீவன் போயிரும் போல இருக்கு. கிழவரின் பேத்தி தேனீர்க்கோப்பையை கிழவருக்கருகே வேண்டா வெறுப்பாகத் தள்ளி விட்டுப் போகிறாள். கிழவர் தான் இந்த விருப்பு வெறுப்புக்களை யெல்லாம் விமர்சிக்க முடியாதவராகத் தானே அந்த வீட்டிலிருக்கிறார். குளிர்காற்று கோரமாக வீசிக் கொண்டிருந்தது. கிழவர் ஓலைப்பாயிலே அட்டையாகச் சுருண்டு கிடந்தார். காய்ச்சல் அனலாகக் கொதித்துக்கொண்டிருந்தது. கிழவரின் மகளுக்கு அப்போதுதான் அவரின் நிலை புரிந்தது. நெற்றியில் கையை வைத்துப்பார்த்தாள் நெருப்பாகக்கொதித்துக்கொண்டிருந்தது வெளியிலே போயிருந்த அவளது கணவனும் வந்துவிட்டார் ''இது கிடக்கிற கிடயப் பாத்தா எனக்கென்னவோ பயமா இருக்கு. இத எடுக்கல்லப் பாக்கல்ல எண்டு நாலு பேர் நாலுவிதமாகக் கதைப் பாங்க ஏதும்மருந்து எடுத்து வந்து குடுங்க, என்றாள்.

காய்ச்சல் வரவரக் கூடிக் கொண்டு இருந்தது. ''பெரியண்ண: அக்காங்களுக்கு எல்லாம் தந்தி அடிச்சிக் கூப்பிட்டா என்னப்பா? இப்ப இவருக்கு ஏதும் நடந்திட்டா செலவெல்லாம் நம்மிட தலையில தான். அவங்களும் நேரகாலத்தோட வந்திட்டாங்களெண்டால் கரச்சலில்ல. தந்தியடிச்சு விடுங்க கெதியில வந்து சேரட்டும். பேதுறுக் கிழவரின் மகள் அவளது கணவனிடம் குசுகுசுத்தாள். கிழவரின் நிலை கவலைக் கிடமென்பது ஓரளவுக்கு நிச்சயமாகி விட்டது கிழவரால் எதையுமே சாப்பிடவோ குடிக்கவோ முடியாத நிலை வாயெல்லாம் கட்டி விட்டது. கிழவரின் பிள்ளைகள் கொண்டு வந்த ஹோர்லிக்ஸ், நஸ்பிறே இப்படி விதவிதமான உணவு வகைகள் எதையுமே அவர் ஏறியட்டும் பார்க்கவும் முடியாமல் முனகிக் கொண்டிருந்தார் ''அப்பா இந்தானே! கொஞ்சம் பால் குடிச்சிட்டு படுங்க'' கிழவரின் இளைய மகள் வழமைக்கு மாறாக கனிவாகக் குழைகிறாள் பேதுறுக் கிழவரின் நிலை அந்தக் கிராமத்தின் மூலை முடுக்கெல்லாம் தெரிகின்றது. கிழவர் எப்படியும் அன்று இறந்து விடுவாரென்று பலரும் ஊகித்து விட்டதால் சொந்த பந்தங்களெல்லாம் ஒன்று கூடத் தொடங்கி விட்டன. ''ஆண்டவனே எண்டு இந்தச் சீவனுக்கு ஒரு குறையுமில்லை'' அவருக்கென்ன எல்லாத்தையும் அனுபவிச்சிட்டார் ''பிள்ளைகளையெல்லாம் நல்ல வசதியான இடங்களில் சேர்த்திருக்கார். இந்தா கொஞ்சமெண்ட முதல் எல்லாரும் வந்திற்றுகள்' ஒரு சிலரைத் திருப்திப் படுத்த சிலரின் சின்னத் தனமான கதைகள் அங்கு நிலை கொள்ளுகின்றன. கிழவருக்கு உண்டு குடிக்கச் சக்தி இருந்த போது அவருக்கு ஏச்சுப்பேச்சு இல்லாமல் எதுவுமே அவரது தொண்


## சிறுகதை

(தொடர்ச்சி 26-ம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் அரங்கம்



உழைப்பு இல்லாத
இடத்தில் உண்மையான
உற்சாகம் இருப்பதில்லை

## வால் வெள்ளி
## அவதானிப்பு முகாம்

இலங்கை அரசு கடந்த பங்குனி மாதத்தில் கேலிஸ் (KALEEYS) வால் வெள்ளி அவதானிப்பு முகாமை அமைத்து, 76 வருடங்களுக்குப் பின் வான் வெளியில் தோன்றிய தூமகேது வால்வெள்ளியை அவதானித்து அதனடிப்படையில் விஞ்ஞான முடிவுகளை வெளியிட விழைந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

* பாதுகாப்பு படை முகாம்கள்
* அகதிகள் முகாம்கள்
* இளைஞர் முகாம்கள்
* யுத்த நிறுத்த கண்காணிப்பு முகாம்கள்

ஆகிய முகாம்களை அமைத்து அனுபவித்த அரசுக்கு வால் வெள்ளியை அவதானிக்கவும், ஆராயவும் ஒரு முகாம் தேவைப்பட்டது வியப்பான விடயமன்று.

* மக்களது உறவுகளை, உரிமைகளை அவதானிக்க,
* சமூக மனப்பாங்குகளை, உணர்வுகளை ஆய்வு செய்ய,
* தேசிய ஐக்கியத்தை- ஒருமைப்பாட்டை நிலைநாட்ட,
* சுமூகமான- அமைதி நிறைந்த வாழ்க்கையை ஏற்படுத்த,

எத்தனையோ முகாம்கள் தேவைப்படும் கால கட்டத்தில் மிகைப்படுத்தப்படும் சில நடவடிக்கைகள் வெளி [illegible]டையாளச் சடங்குகளாகவே அமைந்து விடுகின்றன. இது ஏனைய அமைப்புகளுக்கும், சமூக இயக்கங்களுக்கும் பொருந்தும்.

இந்நாட்டில் பல வருடங்களாக ஏற்பட்ட, ஏற்பட்டிருக்கும் ஒரு சில பிரச்சினைகளை ஆய்வு செய்ய ஏற்படுத்தப்பட்ட எத்தனையோ நிகழ்வுகள் -அவதானிப்புக்கள் மந்தமடைந்திருக்கும் நிலையை தவிர்த்து, புத்தூக்கம் கொடுத்து உண்மையான- நீதியான-விரைவான தீர்வுகளை பெறவேண்டிய வேளையில், இத்தகைய சில மிகையான நேரம் -பணம் செலவிடப்படும் விடயங்கள்-வெளிப்பகட்டுக்கும்-அதேவேளை தேவையற்ற விமர்சனத்திற்கும் இட்டுச் செல்லும் நிகழ்வுகளேயாகும்.

எனவே, நாட்டை ஆள்வோரும், ஏனைய அமைப்புகளைச் சார்ந்தோரும், உள்நாட்டுப்பிணக்குகளின் மூலகங்களை இனம் கண்டு விரைவான தீர்வுகளை ஏற்படுத்த உயரிய நேரத்தை-சக்தியை-ஆற்றலை இக்காலத்தில் செலவிட வேண்டுமென இளைஞர் அரங்கின் சார்பில் குரல் கொடுப்பது,

-கலையுலகன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களை எழுதுகிறேன்

- எஸ். லோகநாதன் -

## இளம் தமிழ் எழுத்தாளர்களுக்கு எமது கருத்துக்கள்

நாம் கேட்ட, படித்த பல சிறந்த இலக்கியங்கள் ஊடாக இவ் வழி முறைகளை கொடுக்கின்றோம். உண்மைப் பொருளை உலகுக்கு வழங்குவதில் பின்வருவனவற்றைக் கருத்திற் கொள்ளுங்கள்.

1. அளவான இலக்கணம்.
2. கலைச் சொற்களைப் பயன்படுத்தல்,
3. வாக்கிய அமைப்புக்கள் - (வசன நடைகள்)

நல்ல தமிழ் எழுத, எழுதும் கருத்தினை தெளிவாக விளங்கிக் கொள்ள அளவான இலக்கணத்தை சேர்த்துக் கொள்ளுங்கள். இலக்கணம் என்பது நாம் எழுதும் விடயத்தை எந் நோக்கத்துடன் எழுதுகிறோமோ, அந்நோக்கத்தின் அடிப்படையில் வாசிப்பவன் உணரும் வகைக்கு அமைவாக எழுதுதலைக் குறிக்கின்றது எழுத்துப் பிழைகள், பொருட் பிழைகள், போலிகள், திணை விகுதி தவறுகள் எழுதும் போது ஏற்படக் கூடாது என்பதனுலேயே ஒவ்வொரு மொழியிலும் இலக்கணம் கையாளப்படுகின்றது.

ஒரு விடயத்தை எழுதத்தீர்மானித்ததும் அவ்விடயத்தை எழுத நாம் கையாளும் சொற்கள் அழுத்தமானதாக, தெளிவானதாக தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். அதே வேளை அச் சொற்களை தொடங்கும் போது தமிழ் இலக்கண ஒழுங்கில் அமைத்துக் கொள்ள வேண்டும் சிறப்பாக,ழ, ள, ற, ன, யெ, யி போன்ற எழுத்துக்களை ஒரு சொல்லின் முதல் எழுத்தாக அமைத்தல் கூடாது. உதாரணமாக ருணி நடனக்காரி என எழுதுவதில் ஆரம்பத்தில் இடம் பெற்ற சொல்லான ருணி யானது இலக்கண அமைவிற்கு தவறுனதாகும் இதனை ''இராணி'' என எழுதுதல் சிறப்பாகும். சொற்கள் இலக்கண அமைவிற்கு நிலை நிறுத்தப்படவில்லையாயின் அது பொருட் பிழையைத் தோற்றுவிக்கலாம். பல சந்தர்ப்பங்களில் எமது சொல்லாட்சிகளில் வடசொல் கையாளப்படுகின்றது. இவைகள் முறையாக வாக்கியங்களில் அமைவு பெறுவிடில் நாம் கூறும் உண்மைப் பொருளை வாசிப்பவர்கள் விளங்கிக் கொள்ள முடியாமற் போய்விடும்.

வளம் மிகு தமிழ் மொழியில் கலைச் சொற்களைப் பயன்படுத்தும் பாங்கினை நாம் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். நடைமுறைக்கு வேண்டிய முறையில் தமிழ் கலைச் சொற்களைப் பயன்படுத்துவதில் எவ்வித தவறுமில்லை. சிறப்பான கலைச் சொற்களை நாம் தவிர்த்து பேச்சு வழக்கில் இருப்பது போன்று எழுத்துத் துறையிலும் அந்நிய மொழிக் 'கலைச் சொற்களைப் பயன்படுத்துகிறோம் 'எக்ஸ்பிரஸ்'' (Express) வருகின்றது. என எழுதும் வழக்கம் இன்று சாதாரணமாகி விட்டது. இதே போன்றே அதிகமான வேற்றுமொழிச் சொற்கள் எழுதப்படுகின்றன. ''எக்ஸ்பிரஸ்'' என்பதை, ''விரைவுவண்டி'' என எழுதுவது சிறப்பானதாகும்.

தமிழ் எழுத்தாளர்கள் பலர் எழுதத் தொடங்கி விட்டார்களாயின் எழுவாய்க்குப் பின்னர் ஏழு எட்டு வரிகள் எழுதிய பின்னரே பயனிலை எழுதி முடிப்பர். இவ்வாறு எழுதுதல் வாசிப்போரை விளக்கமின்மைக்கும், சோர்வுத் தன்மைக்கும் தள்ளி விடுகிறது. இது குறைக்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னுடைய இளம் பருவத்தில் எந்தச் சிறிய விடயத்தைப் பற்றியும் நீண்ட, நீண்ட வார்த்தைகளைக் கொண்டு இல்லாத வளைவெல்லாம் வளைத்து எழுதி வந்தேன். மக்கள் அதை வியக்கக் கூடச் செய்தார்கள். ஆனல் இப்பொழுதோ விடயத்தை நேர் நேராக அப்படி, அப்படியே சொல்லுவது தான் சரியான முறை என்று எனக்குத் தெரி கின்றது'' என இறஸ்கின் (Ruskin) என்ற பேராசிரியர் ஓர் நூலில் கூறியுள்ளார்.

இதே போன்றே மாண்டெயின் (Mantaigne) என்ற பிரெஞ்சு ஆசிரியரும், பேசுகிற படியே வசனம் அமைய வேண்டுமெனக் கூறியுள் ளார்.

இவற்றைக் கருத்திற் கொண்டு எழுத் துத்துறை சிறக்க, அதன் மூலம் உண்மைப் பொருளை உலகுக்கு வழங்கும் எழுத்தாளர் களை நாம் வரவேற்கின்றேம. இவர்களின் எண்ணங்களை எதிர் பார்க்கின்றேம்.

# எண்ணிப் பார்க்கையில்...

## நாவை அடக்கு

இரண்டு கண்கள் படைத்தான்-
நல்லதை நன்கு பார் என்றுன்:
இரண்டு காதுகள் வைத்தான்
நல்லது நிறையக் கேள் என்றுன்
நாக்கு ஒன்றையே படைத்து வைத்தான்
அளவாய்ப் பேசச் சொல்லி,
நடக்கிறதா?
படைக்கும் போது கண்ணையும், காதையும்
மூளைக்கு அருகில் வைத்தான்
நாக்கை மட்டும் குறைத்து வைத்து
இடம் இல்லாமல்
மூளைக்குச் சற்றுத் தள்ளி வைத்து விட்டான்.
அதுவோ அறிவில்லாது
அலையலையாய்க் கதைகள் பொழிந்தே-
தள்ளுகிறது.
ஆண்டவன் இதனை அறிந்துதானே
அத்தனை காவல் வைத்தான்
மேலே கீழ கூரைகளால் அதை
அறைக்குள் சிக்க வைத்தான்.
முப்பத்திரண்டு கட்டைகள் நாட்டி
உள்ளுக்குள் விட்டு வைத்தான்
உதடுகளாலே படலையைப் போட்டு
இறுகப் பூட்டி வைத்தான்
இத்தனையும் மீறி அதுவோ விஷத்தை
அள்ளிச் சொரிகிறது
கண்கள் எதையும் மனிதனுக்குள்ளே
சேர்த்தே எடுக்கின்றன
காதுகள் கூட கேட்பவை தன்னை
அவனுக்கே தருகின்றன.
மறந்தும் இவைகள் கண்டதை
கேட்டதை வெளியில் விடுவதில்லை.
ஆயிரந்தான் தீங்கு சிந்தையில் வரட்டும்
இவை துணைக்குப் போவதில்லை
இதையெல்லாம் சேர்த்துச் செய்கிற தொழிலை
நாவே முடிக்கிறது.
அப்பாவிப் பெண்ணுக்குக் கதைகளைக் கட்டி
ஆளைக் கொல்கிறது.
கணவன் மனைவிக்குச் சிண்டு முடித்துக்
குடும்பம் கலைக்கிறது.
அயலவன் வாழ்வில் புறணி, கோள்களால்
சமாதானம் தொலைக்கிறது.
நம்பும் மனிதனை வளைத்தெடுத்து
வலைக்குள் தள்ளுகிறது.
செய்தவன் பாவம் ஒன்றுயிருக்க
இதைக் கொண்டவன் பாவம்
பலமடங்கு பெருக்குகிறது.
இனத்துக் கிடையில் பகைமையை மூட்டி
பிரித்து வைக்கிறது.
கடவுளுக் கெதிராய் நிந்தைகள் பேசி
அவனைச் சிக்க வைக்கிறது.
இத்தனையும் பற்றி எண்ணிப் பார்க்கையில்
சிந்தை தெளிகிறது.
அளவாய்ப் பேசி அடங்கி நின்றுல்
அனைத்துமே வருகிறது !
வாய்மையால் எதிரி மதிக்கின்ற நிலையும்
நமக்கு வருகின்றது
உண்மையால் நண்பர் கூடிச் சேரும்
பெருமையும் தெரிகின்றது.
சத்தியம் நித்தியம் இறைவனைக் காட்டும்
தன்மை புரிகிறது.
இத்தனையும் வரும், நாவே அடங்கு!
எனத் தைரியம் பிறக்கிறது.

ஆனந்தா A.G. இராஜேந்திரம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேசு புராணத்தில் இனிய தமிழிலக்கிய இன்பம்

திருமதி ப. செல்வராஜகோபால்
(கனடா - தொரன்ரோ)

– தொடர்ச்சி –

*19*

தாதியர் தாங்கத் தங்கத் தாலிழை-
தொட்டில் இட்டு
வேதியர் போற்ற வெங்கும் வேதங்-
கள் ஒலிக்க கெட்ட
ஆதியாம் பவப்பேய் நீங்க ஆலத்தி-
எடுத்து ஒட்ட
சோதியார் பிறந்த கோயில் சொர்க்-
கமே யாகும் என்பார்.

*20*

பொன்மகன் பிறப்பா லந்தப் பூநகர்-
பொலியும் மன்னர்
நன்கொடை பலவுந் தாங்கி நண்-
ணிமே பணிந்து நிற்பர்
மன்மணல் நகர மாகும் மலர-
மனமே பூக்கும்
கன்னியின் மகனுர் உற்ற கடிநகர்-
எதுவோ என்பார்.

*21*

கோபுரங் கூடல் மாடக் கேர்விலே-
என்பார் கோதில்
தாபரன் தங்கும் மாளிகை தகை-
மிகும் என்றே சொல்வார்
மாபரன் அருகில் ஆடும் மயில்கிளி-
பாடும் தூவி
தூபரந் திதமாம் மெத்தை துயின்-
றிடும் அமைதி நாடே.

இத்தகைய கோமர்ன் பிறந்த இடத்திலே ஏவற் பெண்கள் அவரைத் தாங்கி நிற்பார்கள். தங்கத்தாலிழைத்த தொட்டிலில் இட்டு குரவர்கள் போற்றி மறையோதுவார்கள். பேய் பிசாசு அணுகாது ஆரத்தி எடுத்துக் கண்ணூறு கழிப்பார்கள். இத்தகைய சோதிப்பிரகாச முள்ள அரசிளங் குமரன் பிறந்த இடம் சுவர்ணபதியாகவே மாறியிருக்கும் என்ருர்கள். அதுமாத்திரமா? அந்த நகரமே பூப்போல பொலிவுற்றிருக்கும். மன்னர்கள் நல்ல பரிசுகளை அவர் முன் வைத்து பணிந்து செல்வார்கள். நகரத்தில் சாதாரண மணலைக் காணமுடியாதிருக்கும். மனிதர்களே மணல் போலத் திரிவார்கள். அங்கு பூக்கள் பூக்காது மனங்களே மலரும். இத்தகைய சிறப்புகளுக்குரிய கன்னியின் புதல்வன் பிறந்த பொன்னகரம் எதுவோ என்று அங்கலாய்த்தனர்.

அவர் அறிஞர்கள் கூடும் கோபுரங்களையும் மாடங்களையும் உடைய அரண்மனையிலேதான் பிறந்திருப்பார். குற்றமற்றவரும் மற்றவர்களுக்கு துணையாக இருப்பவருமாகிய அக்குமரன் தங்குமாளிகை மிகவும் தகுதி பெற்றதாகவே இருக்கும். அவருக்கு அருகில் மயில்கள் ஆடும் கிள்ளைகள் வள்ளைப்பாட்டுப் பாடும். இறகிஞல் ஆன அணையிற்ருன் துயில்வார். அப்படி அவர் துயிலும்போது அந்த நாடே அமைதியாக இருக்கும் என்றெல்லாம் எண்ணிஞர்கள்.

*22*

ஆயிரம் அணிகள் அஃதி லானவோர்-
அணியைத் தேர
ஆயிரங் கரங்க ளோயும் அணியா-
அலைவ கோடி
ஆயிர மாக அன்பின் அணியென முத்த-
மீந்து
பாயிரஞ் செய்யுந் தந்தை பரிவதில்-
மயங்கு மன்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வ ல) அணிவதற்கு ஆயிரம் அணிகள் உள்ளன அதில் ஓர் பொருத்தமான ஆபரணத்தைத் தேர்ந்தெடுக்க ஆயிரங் கரங்கள் செயல் புரிந்து ஓயும். அவ்வாறு அணியத் தகாததெனக் கழிக்கப்பட்ட ஆபரணங்கள் இன்னும் கோடி இதே வேளை அன்பின் முத்து அணிகளை தந்தை முன்னுரையாகக் கொடுப்பதைக் கண்டு அன்னை மகிழும்.

23

பாலனைக் காண வந்து பார்த்தவர்-
கோடி பார்க்க
ஏலவே முடியா தங்கு ஏங்குவோர்-
கோடி எட்டிச்
சீலனைக் கண்டார் சொல்லுஞ் சிறி-
துரை கேட்டுக் கண்ட
கோலமாய் போவோர் கோடி குறை-
மிகு நமக்கு ஏதோ.

24

என்றவர் எண்ணங் கொண்டு எடுத்-
தடி வைத்து வெள்ளி
ஒன்றிடப் பார்வை சேர்த்து ஒரு -
திசை நோக்கிக் கையில்
நன்றியின் பரிசை ஏந்தி நடந்தனர்-
நால்வர் ஞானங்
குன்றெனக் குவிந்த வாணர் குல-
மகன் கோயில் நோக்கி.

இத்தன்மைக் குரிய மனுமகனை கோடிக் கணக்கான மக்கள் வந்து தரிசிப்பார்கள். தரிசிக்க முடியாது மனங் கலங்குபவர்களும் கோடிக் கணக்காகவே இருக்கும். தூரத்திலே நின்று நற்குணம் நிறைந்த தேவகுமாரனை எட்டிப் பார்ப்பவர்கள் கோடியாக இருக்கும். அத்தகையோர் திரும்பி வந்து சொல்வதைக் கேட்டே பார்த்தோ மென்ற மனத் திருப்தியுடன் திரும்பிப் போவோர் கோடி. இப்படியிருக்க பலவித குறைகளுடைய நமக்கு என்னவாகுமோ என்று கலங்குவர்ராயினர். பின்பு தாரகையில் தமது பார்வையைச் செலுத்தி ஒரே திசையாக நான்கு வானசாஸ்திரிகளும் ஏற்றபரிசுப் பொருட்களை ஏந்தியவர்களாக அவதார புருடன் பிறந்திருக்கும் இடத்தை நோக்கிப் பயணமாயினர்.

25

உண்டில லுறக்கங் கொள்ளா தூர்ந்-
தன ருதைக் காற்றில்
மணதிடர் மலைகள் பள்ளம் மடை
திறந் தோடும் கங்கை
எண்திசை பரந்த பாலை எழில்மிகு-
சோலை தாண்டிக்
கண்டிடும் கடுத்தே யொன்றக் கதிர்-
சுடக் கடந்தா ரெல்லை.

கர்த்தரின் பிறப்பிடத்தைக் காணவேண்டும் அவரைத் தரிசிக்க வேண்டுமென்ற ஒரே எண்ணம் கருத்தை நிரப்ப குளிர் காற்றிலும் கதிரவன் சூட்டிலும் உண்ணாது உறங்காது நனிமெலிந்து மணல் வெளியிலும் குன்றுகள், மலைகள், பள்ளத்தாக்கு என்பவற்றிலும் பெருகியோடும் ஆற்றிலும் கண்ணுக் கெட்டாத தூரம் பரந்த பாலைச் சுரத்திலும் சோலைகளிலும் அலைந்து ஒரு நாட்டின் எல்லையைக் கடந்தார். (எ-ம்)

முற்றும்

---

நமது மிகப் பெரிய மகிமை என்பது ஒரு போதும் தோல்வியடையாமல் இருப்பதல்ல. மாறாகத் தோல்வியடைகின்ற ஒவ்வொரு வேளையிலும் மீண்டும், மீண்டும் எழுந்து செயல்படுவதுதான்.

-கன்பூசியஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(20 ம் பக்க தொடர்ச்சி)

டைக்குள் இறங்கவில்லை. கிழவரின் நிலை மேலும் மேலும் மோசமாகின்றது அந்தச் சூழலின் அமைதி குலைகின்றது. பேதுறுக் கிழவர் இப்போது அமைதியில் நிலை கொண்டுவிட்டார். அந்த வீட்டின் ஒப்பாரி கூரையைத் துளைத்து வானில் மோதிப் பரவுகிறது. பலரும் பலவிதமாகக் கதறிக் குமுறுகிறார்கள். சிந்திய மூக்கோடு வருகிறார் கிழவரின் மூத்த மகன் "மேளகாரனைச் சொல்லிவிடுங்க வெள்ளகட்டிறத்துக்கு வரச் சொல்லுங்க" கிழவரின் இறுதிச் சடங்கிற்கு ஏகப்பட்ட ஏற்பாடுகள் நடக்கின்றன. கிழவருக்கு எதுவுமே தெரியாது அவர் அமைதியாக உறங்கிவிட்டார்.

(யாவும் கற்பனையே)

❋

## கவிஞருக்கு நன்றி.

கடந்த ஓராண்டாக 'தொண்டன்' இதழில் 'நெருப்பிடை நீந்தும் நிலாக்கள்' குறுங் காவியத்தை எழுதி வந்த திரு நிலாதமிழின்-தாசன் அவர்களுக்கு எமது இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

-ஆசிரிய குழுவினர்-

## எது பாவம்?

தவறு என்று தெரிந்த பிறகும் நினைப்பதற்கு, செய்வதற்கு பெயர் தான் பாவம்.

## நீ இப்படி இரு?

மற்றவர்கள் உன்னை எட்டியிருந்து பார்க்கும்போது நீ அவர்களுக்குச் சிகரமாகவும், அருகிலிருந்து பார்க்கும் பொழுது சின்னக் குழந்தையாகவும் காட்சியளிக்க வேண்டும்.

## இப்போது நீ!
## அப்போது அவர்!

இறக்கும் வரை இறைவன் பக்கம் நில்! இறந்தபின் இறைவன் உன் பக்கம் நிற்பார்.

## செபி! செய!


ஆண்டவன் முன்னால் செபித்த பிறகு உனக்கு எது சரியென்று படுகிறதோ அதைத் துணிந்து செய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 29

(மத்தேயு நற்செய்தி)




பரிசு : 50/-, 25/-

முடிவு திகதி :

**31-5-86**

முழுப்பெயர் ...........................................................

முகவரி...........................................................

...........................................................

## இடமிருந்து வலம்

1 செபுலோன் தப்தலி நாட்டில் கடலோரமாயுள்ள- ஓர் ஊர்.

4 நிறங்களில் ஒன்று நிலை மாறி நிற்கின்றது.

6 குருடர் மீண்டும் பெற்றது.

7 சகோதரனை இப்படி அழைப்பவன் தலைமைச்- சங்கத் தீர்ப்புக்குள்ளாவான்.

8 செபதேயுவின் மக்கள் இதனையும் விட்டு விட்டுச்- சென்றனர்.

10 உரோமைப் பேரரசனுக்காக மக்களிடமிருந்து- அறவிடப்பட்டது.

11 இதில் அத்திப்பழங்களைப் பறிப்பாருண்டோ?

14 யாக்கோபின் மூத்த புதல்வன்.

16 இவருடைய காய்ச்சலை இயேசு குணப்படுத்தினார்.

## மேலிருந்து கீழ்

1 இதன்மீது வீடு கட்டுபவன்- அறிவாளி.

2 வழியோரமாய் விழுந்த- விதைகளை இது தின்றது.

3 அருளப்பர் ஞானஸ்நானம்- கொடுக்கப்பயன்பட்டது. தலை கீழாய் வருகின்றது.

5 பணமாகப் பயன்படுத்தப்படும்- உலோகங்களில் ஒன்று

7 நடக்க முடியாதவர்.

9 இயேசு இதனால் அடிக்கப்- பட்டார்.

11 இதனைப் பன்றிகள் முன்- எறியலாமா?

12 இயற்கைக்கு அப்பாற்பட்டது. இறைவல்லமையால் செய்ய- முடிந்தது.

13 முள்முடி வைக்கப்பட்ட இடம்.

14 ஏரோது இந்த நாட்டு- அரசனாக இருந்தான்.

15 யூதாவின் மனைவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 27.

## முடிவுகள்

இடமிருந்து வலம்

1 வானம்
2 மனிதன்
3 விசுவாசம்
5 சக்கரம்
6 பணக்காரர்
8 பொன்
9 துரு
10 புகை
11 ராக்காப்
13 அயலான்
14 யோபு
15 அழுக்கு
16 மாது

மேலிருந்து கீழ்

1 வாய்
4 சுக்கான்
6 பண்பு
7 நெருப்பு
11 கஅழு (அழுகை)

## பரிசு பெறுவோர் :

*1-ம் பரிசு :*

டெபோரு சுகந்தா கோபன்
83, யாட் றோட்,
கல்முனை.

*2-ம் பரிசு :*

திரு சா. அ. தாசன் குருநல்
கோயில் வீதி,
மூதூர்-3.

---

**போட்டியாளர் கவனத்திற்கு**

தொண்டனில் பிரசுரமாகும் விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டிக் கூப்பனில் நிரப்பி அனுப்பப் பட்டால் மட்டுமே போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படும். வேறு வகையில் வரைந்து அனுப்பப்படும் படிவங்கள் போட்டியில் சேர்க்கப் படமாட்டர்து என்பதை போட்டி யாளர்க்கு நினைவூட்ட விரும்புகி றோம்.

–நிர்வாகம்

---

## பாராட்டுப் பெறுவோர் :

1 பெனடிக் ஜெயா
லூர்து மாதா கோயிலடி,
பாலையூற்று,
திருகோணமலை.

2 லெயோனு பேனடேற் ஜோண்சன்
லூர்துமாதா கோவிலடி,
பாலையூற்று,
திருகோணமலை.

1 நே. கலைச்செல்வி
2-ம் ஒழுங்கை,
கல்லடிக் கொலனி.
மட்டக்களப்பு.

4 தோ. அ. வரசன்
(உதவி அரசாங்க அதிபர்-
மூதூர். அலுவலகம்)

5 ஜோசப் ஸ்டாலின்
178/3, செக்கடித் தெரு,
கொழும்பு-3.

பங்குபற்றியோர் : 79

சரியான விடை அளித்தோர் : 62

அனைவருக்கும் எமது நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பக்கம்

## பாராட்டு !

பங்குனி மாத இதழ் இனிய நறுமணங்களை வீசியது சிறப்பாக. எழுவானம் என்ற சிறுகதை இளஞ் சமுதாயத்துக்கு ஒரு சவாலாக அமை கின்றது இக்கதை மூலம் தாய்க்குலத்தின் மேன்மையை எடுத்துக்காட்டிய முத்துமாதவன் அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.

A P. இதயராஜ்
சூசையப்பர் குருமடம்,
மட்டக்களப்பு.

## பக்கம் மாறி . . .

பங்குனித் தொண்டன் மாறுபட்ட பக்கங் களுடனும், ஒரே தலையங்கம் கொண்ட இரு கட்டுரைகளுடனும் பிரசுரிக்கப்பட்டிருப்பது குறித்து மனம் வருந்துகிறேன்.

ம யேசுதாசன்
திருமலை.

## யார் குற்றம்?

பங்குனித் திங்களிதழ் படித்தேன். 'சாத்தானின் கூப்பாடு' என்னும் கட்டுரை அநேக புத்தகங்களில் அச்சிடப்படவில்லை. இதற்குப் பதிலாக 'சொந்தம் எப்போதும் தொடர் கதை தான்' என்பதை இரண்டு முறை அச்சிட்டுள்ளீர்கள் இப்படியான குறைகளை தவிர்ப்பீர்கள் என நம்புகிறேன்

K. சாகாயம்
பாலையூற்று.

## சாத்தானின் நண்பரே !

தவக்காலத் தொண்டனில் பிரசுரமான 'சாத்தானின் கூப்பாடுகள்' மிகச்சிறப்பாக இருந்தது. கிறீஸ்துவுக்கும், மனிதருக்கும் உள்ள தொடர்பையே நான் இதுவரை அறிந்திருந்தேன் ஆனல், சாத்தானுக்கும் மனிதருக்கும் இவ்வளவு நெருங்கிய தொடர்பு உள்ளதை இப்போதுதான் அறிந்தேன் மலர்வேந்தன் அண்ணாவும் சாத்தானுடன் சில மணி நேரம் விளையாடி இருக்கிறார்போலும் ஏனெனில் அவ்வளவு சுவையாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

செல்வி பெனிற்ரு தவராசா
தாண்டவன்வெளி,
மட்டக்களப்பு.

## ஒரு பிரார்த்தனை!

நெருப்பிடை நீந்தும் நிலாக்கள் என்னும் குறுங் காவியம் வாசிப்பதற்கு மிக்வும் சுவையாகவும், விறுவிறுப்பாகவும் நடைபோடுகிறது. ஜோதியும், வேந்தனும் ஒன்று சேர்ந்துவிட வேண்டுமென்று இறைவனை பிரார்த்திக்கிறேன்.

ப. பற்றிமா ஜெயசீலி
பாலையூற்று.

## விழிமேல் விழிவைத்து . . . . !

தொண்டனைத் தொடர்ந்து வாசிக்கிறோம். தாமதமாகக் கிடைத்தாலும் எப்போது வருவான் தொண்டன் என்று ஏங்கவைக்கின்றான்.

இடம்பெறும் அனைத்து அம்சங்களும் சிந்தனையைத் தூண்டிவிடுவதாக அமைந்துள்ளன. உண்மையை மறைக்காது உள்ளபடி சொல்லும் தொண்டன் கிறீத்தவ இலக்கிய ஏடாக இருந்தாலும் சர்வமதத்தினரும் கூட்டாகப் படிக்கவேண்டிய ஒன்று.

செல்வி உஷா பாலசுப்ரமணியம்
கிளென்டெவன் எஸ்டேட்

## விருந்தோ! அருமருந்தே!

பங்குனி மாத தவககால சிறப்பிதழில் அருள்திரு ஜோசுவா ரெத்தினம் அவர்கவது 'முறைப்பாடு' பாராட்டுக்குரியது சிந்தனைக்கு விருந்தும். தியானத்துக்கு அருமருந்தாயும் அமைந்தது

யோசப் சந்தணம்பிள்ளை செபமாலை
பாலையூற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REGISTERED AS A NEWSPAPER


வெளிவந்துவிட்டது !

# ஆனந்த கீதம்

## கிறிஸ்தவப் பாடல்கள்

- புத்தம் புதிய பதினைந்து பாடல்கள்.
- நெஞ்சை உருக்கும் இனிய இசை.
- 60 நிமிடம் ஓடக்கூடிய தரமான “ மெக்சல் ” நாடாவில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
- திரு/மட் மறைமாவட்ட சமூகத்தொடர்பு நிலையத்தின் மாபெரும் வெளியீடு.
- வீட்டிலே கேட்டு மகிழலாம். ஒலிபரப்பில் ஒலிக்கச் செய்யலாம்.
- விலை ரூபா 60/- தபாற்செலவு தனி.
- வாங்குங்கள் ! வளர உதவுங்கள் !!

தொடர்பு :

இயக்குனர்,

சமூகத்தொடர்புகள் நிலையம்,

ஆயரகம்,

மட்டக்களப்பு.


விபுலாநந்தா அச்சகம் - மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org